இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 156 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – தை 01 – திங்கள்கிழமை 15 ஜனவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 156 : Thiruvalluvar Year - 2054 - Thai 01 - Monday 15 January 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## சாதனைகளின் பேரரசாக திராவிட மாடல் ஆட்சி!

# தமிழ் மக்களின் மகிழ்ச்சிப் பொங்கலே எனது மகிழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் வாழ்த்து!

**சென்னை, ஜன. 15 -**

**சாதனைகளின் பேரரசாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது என்றும், தமிழ் மக்களின் மகிழ்ச்சிப் பொங்கலே எனது மகிழ்ச்சி என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பொங்கலோ பொங்கல்**
**பொங்கலோ பொங்கல்**
**பொங்கலோ பொங்கல்**

தாய் தமிழ்நாட்டு மக்கள் எல்லோருக்கும் என் இனிய தமிழர் திருநாள்-பொங்கல் நல்வாழ்த்துகள்!

**“ஆண்டுக்கோர் நாள்**
**அருமை மிகு திருநாள்**
**பொங்கல் புதுநாள்**
**நமக்கென்று உள்ள ஒப்பற்றவிழா**
**இதற்கு ஒப்பான விழா உலகில் எங்கும் இல்லை”**

- என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

**“களம்காண்பான் வீரன் என்றால் - நெற்**
**களம் காண்பான் உழவன்மகன்!**
**போர்மீது செல்லுதலே வீரன் வேலை -வைக்கோற்**
**போர் மீது உறங்குதலே உழவன் வேலை !**
**பகைவர் முடி பறித்தல்வீரன் நோக்கம் - நாற்று**
**முடிபறித்தல் உழவன் நோக்கம்!**
**உழவனுக்கும் வீரனுக்கும்**
**ஒற்றுமைகள் பல உண்டு;**
**வேற்றுமையோ ஒன்றே ஒன்று -**
**உழவன் வாழவைப்பான்;**
**வீரன் சாகவைப்பான்’**

- என்று எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்.** இது வள்ளுவர் வாக்கு.




உழவு என்பது தமிழர்களின் தொழிலாக மட்டும் அல்ல பண்பாட்டு மரபு.

அதனால்தான் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக பொங்கல் திருவிழாவை கொண்டாடி வருகிறோம்.

தை முதல் நாள் உழைப்பின் திருநாளாக

## கோடிக்கணக்கான மக்கள் மனதில் மகிழ்ச்சியைப் பொங்க வைத்துள்ளது அரசு!

தமிழர் பெருநாளாகக் கொண்டாடி வருகிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக கூடுதல் மகிழ்ச்சிக்குரியதாக தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப்பெரும் ஆட்சி நடைபெற்று வருகிறது.

பொங்கல் திருநாள் மட்டுமல்ல, எல்லா நாளும் மகிழ்ச்சிக்குரிய நாளே என்று சொல்லத்தக்க வகையில் நமது திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது.

தேர்தலுக்கு முன்பு கொடுத்த பல வாக்குறுதிகள் நிறைவேற்றியும், சொல்லாத பல திட்டங்களைச் செய்து காட்டியும், சாதனைகளின் பேரரசாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

மகளிருக்கு விடியல் பயணம் முதல்,

கொரோனா காலத்தில் அனைத்து குடும்பத்திற்கும் 4000 ரூபாய்,

வெள்ள நிவாரணமாக 6000 ரூபாய்,

கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் ஆயிரம் ரூபாய்,

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக செப்டம்பர் மாதம் முதல் ஒரு கோடிக்கும் மேல் மகளிர்க்கு 1000 ரூபாய் வழங்குகிறோம்.

பெரும் நிதிநெருக்கடிக்கு இடையில் பொங்கல் தொகுப்புடன் பரிசுத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கி கோடிக்கணக்கான மக்கள் மனதில் மகிழ்ச்சியை பொங்க வைத்துள்ளது நம்முடைய அரசு.

பால் பொங்குவதைப்போல கோடிக்கணக்கான மக்களின் மனங்களில் மகிழ்ச்சி பொங்கி வருவதை நான் காண்கிறேன்.

உங்கள் மகிழ்ச்சிதான் என் மகிழ்ச்சி.

உங்களது மனங்களில் ஏற்படும் சிரிப்புதான் என்னுடைய பூரிப்பு.

**என் பேரன்பிற்குரிய தமிழினத்தின் உடன்பிறப்புகளே,**

**அன்பு பொங்க**
**ஆசை பொங்க**
**இன்பம் பொங்க**
**ஈகை பொங்க**
**உண்மை பொங்க**
**ஊரே பொங்கட்டும்.**
**இனிய பொங்கல்**

**இந்தியாவின் பொங்கலாக மாறப்போகும் ஆண்டு இது.**

அனைவர்க்கும் என் இனிய தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

**பொங்கலோ பொங்கல்**
**பொங்கலோ பொங்கல்**
**பொங்கலோ பொங்கல்**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் ஆன்மாவுக்கு எதிரானது; அரசியல் சாசன அறத்துக்கு மாறானது!

# அயோத்தி விழா, அரசியல் விழாதான்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

**சென்னை, ஜன. 15 -**

**“அயோத்தி விழா, அரசியல் விழா தான்” என்று கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து கழகப் பொருளாளரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2014ஆம் ஆண்டு ஒன்றிய அளவில் ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதா கட்சி, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்ற வில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லையே என்ற கூச்சமும் அந்தக் கட்சிக்கு இல்லை. இதை மறைப்பதற்கும் மக்கள் கவனத்தைத் திசைதிருப்ப வும் அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதைத் தனது சாதனையாகக் காட்டி, தங்களது தோல்வியை மொத்தமாக மறைக்க நினைக்கிறார்கள்.

**எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை!**

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதிகளை வாரி வழங்கியது. அதில் எந்த வாக்குறுதியை இந்தப் பத்தாண்டு காலத்தில் நிறைவேற்றி இருக்கிறார்கள்?

உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவோம், ஆண்டுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம், நாடு முழுவதும் இருக்கும் நதிகளை இணைப்போம், 2022ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைத்துக் குடும்பத்துக்கும் சொந்த வீடு கட்டித் தருவோம், இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக மாறும், வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்ட கருப்புப் பணத்தை முழுமையாக மீட்போம், மீட்கப்பட்ட கருப்புப்பணத்தை இந்திய மக்கள் அனை வருக்கும் 15 லட்சமாகத் தருவோம் என்றெல்லாம் நீட்டி முழக்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறை வேற்றப்பட வில்லை.

தமிழ்நாட்டுக்குப் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார்களே... அதில் ஏதாவது செய்தார்களா என்றால், அதுவும் இல்லை!

நாட்டு மக்களுக்கு பா.ஜ.க. கொடுத்ததெல்லாம் பெட்ரோல் விலை உயர்வு! டீசல் விலை உயர்வு! சமையல் எரிவாயு விலை உயர்வு! இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி!



நடுத்தரச் சூழலில் வாழும் மக்களையும், அனைத்துத் தரப்பு மக்களை யும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

ஜி.எஸ்.டி. மூலமாக மாநில நிதி வளங்களைச் சுரண்டி நெருக்கடிக்கு உள்ளாக்கினார்கள்.

மழை, புயல் காலங்களில் தர வேண்டிய நிவாரணங்களைக் கூடத் தராமல் வஞ்சிக்கும் அநீதி நடக்கிறது.

இப்படி அனைத்து வகையிலும் மக்களைப் பத்தாண்டு காலமாக வேட்டையாடி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில், இன்னும் முழுமையாகக் கட்டிமுடிக்காத அயோத்தி இராமர் கோயிலைக் கட்டியிருக்கிறோம் என்று சொல்லி வாண வேடிக்கை காட்ட முயல்கிறது.

**தி.மு.க. அரசியல் குளிர் காய்ந்தது இல்லை!**

பேரறிஞர் அண்ணா அவர்களின் காலந்தொட்டு, “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்ற கோட்பாட்டைப் பின்பற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்திக் கூறும் மதச்சார்பின்மை என்ற கோட்பாட்டில் ஆழமான பிடிப்பு கொண்ட இயக்கம். வெறுப்பரசியலைப் புறந்தள்ளி சகோதரத்துவம் ததும்பும் நல்லிணக்கத்தை நாடும் தி.மு.கழகம், ஒருபோதும் அரசியலை ஆன்மிகத்திலும் பக்தியில் அரசியலையும் புகுத்தி அரசியல் குளிர் காய்ந்தது இல்லை.

**பல்லாயிரக்கணக்கான ஆலயங்களில் திருப்பணிகள்!**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நல்லாட்சியில் பல்லாயிரக் கணக்கான ஆலயங்களில் திருப்பணி கள், ஆயிரம் கோயில்களுக்குக் குடமுழுக்குகள் செய்தும், இலட்சோப லட்சம் மக்கள் திரளும் திருவிழாக்களில் இறையன்பர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்தும், 5381 கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் சொத்துகளை மீட்டும் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் ஆன்மீகத் தரப்பு மக்களும் போற்றி வருகின்றனர். இவற்றையெல்லாம் தேர்தல் மேடைகளில் பேசி ஓட்டரசியல் ஆதாயத்தை நாங்கள் நாடியதில்லை.

**நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல!**

இறை நம்பிக்கை ஒருவரது ஆன்மத் தேடல்; தனிப்பட்ட உரிமை. அரசியல் அணி திரட்டவும், வாக்கு வங்கிக்காகவும் பக்தியை மூலதனமாக வைத்து, மக்களின் நம்பிக்கையில் அரசியல் செய்வது இந்தியாவின் ஆன்மாவுக்கு எதிரானது; அரசியல்சாசன அறத்துக்கு மாறானது; நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லது அல்ல!

இறை நம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதரின் விருப்பமும் உரிமையும் ஆகும். ஒருவரது பக்தியை அரசியலுக்கான முதலீடாக மாற்றுவது ஜனநாயகத்துக்கு எதிரானது மட்டுமல்ல, ஆன்மீக அறங்களுக்கே எதிரானது ஆகும். கோயில் கட்டுவதையும், திறப்பதையும் தனது கட்சியின் சாதனையாகக் காட்டி மக்களை ஏமாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசும், பிரதமர் நரேந்திர மோடியும் நினைப்பது ஏற்கத் தக்கது அல்ல. ஆன்மீகத் திருவிழாவை பா.ஜ.க.வின் அரசியல் திருவிழாவாக மாற்ற நினைப்பதை அறிவார்ந்த இந்திய மக்கள் புறந்தள்ளுவார்கள்.

**‘மத ராஷ்டிரா’வுக்கான கால்கோள் விழா!**

பாரதீய ஜனதா கட்சி தனது ‘மத ராஷ்டிரா’வுக்கான கால்கோள் விழாவைப் போல ஒரு கோயில் விழாவைப் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு காலம் காலமாக வாழக்கூடிய இந்திய நாட்டின் பன்முகத்தன்மையைச் சிதைக்கும் செயலை பா.ஜ.க. தொடர்வதும் நல்லதல்ல!

மக்களுக்கு நன்மை செய்வதன் மூலமாக அல்லாமல், மக்களை ஏமாற்றுவதன் மூலமாக வெல்ல முடியுமா என்று பார்க்கிறது பாரதீய ஜனதா கட்சி. இதற்கு இந்திய நாட்டு மக்களே தக்க பாடம் கொடுப்பார்கள் என்பது உறுதி.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 15-01-2024

# சமத்துவமாய் பொங்கட்டும்!

இயற்கையுடன் இணைந்ததே தமிழர்களின் – தமிழ்நாட்டின் வாழ்வியல் முறையாகும். இயற்கையை வணங்குதல்தான் தமிழர்களின் – தமிழ்நாட்டின் மரபும் ஆகும். மரபின் தொடர்ச்சியும் ஆகும்.

**“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை.” (குறள்:1031) - என்றார் வான்புகழ் வள்ளுவர். எத்தனை தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழிலுக்கு அடுத்தே அத்தனை தொழில்களும் என்றவர் அவர். மண்ணையும் மக்களையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அதே போல மண்ணையும் பண்பாட்டு விழுமியங்களையும் பிரிக்க முடியாது. வேளாண்மையைக் கொண்ட மனிதன், வேளாண் விளைச்சல் கிடைக்கும் முதல் நாளைக் கொண்டாடினான். அதுதான் பொங்கல் பெருவிழா. முதல் விளைச்சலை வைத்துப் பொங்கியது (சமைத்தது) தான் பொங்கல் பெருவிழா.**

“தைஇத் திங்கள் தண்கயம் படியும்” – என்று நற்றிணையும்

“தைஇத் திங்கள் தண்ணிய தரினும்” என்று குறுந்தொகையும்

“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ” – என்று கலித்தொகையும் சொல்கிறது.

**பொங்கலைப் பற்றிய அதிகமான பாடல்கள் பரிபாடலில் உள்ளன. வேத காலத்துக்கு முன்பு இருந்தே கொண்டாடப்படும் விழாவாக இது அமைந்துள்ளது. அதனால்தான் இதற்கு எந்த கற்பனைக் கதையும் இல்லை என்றார் தந்தை பெரியார்.**

“மதுக்குலாம் அலங்கல் மாலை மங்கையர் வளர்த்த செந்தீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்” – என்கிறது சீவக சிந்தாமணி.

செந்தீ மூட்டிப் புதுப் பானையில் இனிய பாலொடு கலந்த சோற்றைப் பொங்கலாகப் பொங்கிடும் பண்பாட்டு விழாவாக சங்க காலத்தில் இருந்து கொண்டாடப்படுகிறது பொங்கல் திருநாள்.

உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்,
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்,
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது, ஏற்றிச்,
சாந்த விறகின் உவித்த புன்கம்,
கூதளங் கவினிய குளவி முன்றில்,
செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்,
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி,
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும! – என்கிறது புறநானூறு.

புதிதாகக் கறந்து நுரையெழும்பும் தீம் பாலிலே புத்தரிசியை இட்டு, சந்தனக்கட்டைகளை விறகாகக் கொண்டு அடுப்பெரித்து ஆக்கிய பொங்கலைப் பலரோடு பகிர்ந்து உண்ணுகின்ற வழக்கத்தைச் சொல்கிறது புறநானூறு.

“பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரள்தான் துமிந்த வினைஞர்”

என அறுவடை செய்யும் உழவரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

“புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து” – என்கிறது சிலப்பதிகாரம். புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும், பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து வழிபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சங்க காலத்தில் ‘புழுக்கல்’ என்றால் பொங்கல் என்று பொருள். இன்று நாம் சொல்லும் ‘புழுங்கல் அரிசி’ இந்த வழக்கமாகத்தான்.

“நெய்பூசும், பொன்புழுக்கள் நேரிழையார்க்
கொண்டாடும் தைப்பூசம்” – என்கிறார் திருஞானசம்பந்தர்.

தனது விளைச்சல் அனைத்தையும் சூரியனுக்கு முன் படையல் இட்டு வணங்கினார்கள். கதிரவனின் ஒளியினால்தான் பயிர்கள் வளர்கின்றன என்றும், காய்க்கின்றன என்றும் அன்றே கண்டுபிடித்தார்கள்.

தை முதல் நாள் என்பது அந்த ஆண்டின் புதுத் தொடக்கம் ஆகும். அப்படியானால் முந்தைய பழையவைகளைப் போக்க (அழிக்க) வேண்டாமா? அதனால்தான் பொங்கலுக்கு முந்தைய நாள் ‘போக்கி நாள்’ கொண்டாடப்பட்டது. அதுதான் இன்று பேச்சு வழக்கில் ‘போகி யாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழியின் இறுதிதான் ‘போக்கி’ நாள். தை முதல் நாள், ‘போக்கி’கள் அனைத்தையும் நீக்கி புதுமைகள் தொடங்கும் நாள் ஆகும். உழவுக்கு உறுதுணையாக இருப்பவை மாடுகள். எனவே அடுத்ததாக மாடுகளுக்கான நாள். அனைவரையும் கண்டு மகிழும் நாள் ‘காணும் பொங்கல்’. இந்த இனத்துக்கு மட்டுமல்ல, உலகுக்கே அறத்தைச் சொன்ன திருவள்ளுவர் நாளும் இத்தோடு சேர்கிறது. எனவே தான், பொங்கல் வாரம் என்பது தமிழர் தம் பண்பாட்டு வாரமாக அமைந்திருக்கிறது.

அதனால்தான் இதனை ‘சமத்துவப் பொங்கலாகக் கொண்டாடுங்கள்’ என்று சொல்லி வாழ்த்தியிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“தமிழர் திருநாளைச் ‘சமத்துவப் பொங்கல்’ என்று பெயரிட்டு எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். கழக உடன்பிறப்புகளுக்கும் மக்களுக்கும் பொங்கல் பரிசுகளை வழங்கிடுங்கள். அனைத்து மதத்தினரும், சாதியினரும் கலந்து கொள்ளும் சமத்துவப் பொங்கலாய் இது அமைந்திட வேண்டும்.**

**குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனத் தனித்தனியாகப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, சல்லிக்கட்டில் வெற்றி பெறும் காளைகள் - மாடுபிடி வீரர்கள் என வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்க வேண்டும்.**

**கழகத்தினர் அனைவரது இல்லங்களிலும் ‘சமத்துவப் பொங்கல்’ எனக்கோலமிட்டு, அதனைச் சமூக வலைதளங்களில் பகிருங்கள்! அதுதான் தலைநகரில் பொங்கல் கொண்டாடும் எனக்கு நீங்கள் தரும் இனிப்பான பொங்கல் வாழ்த்தாகும்.” என்று கேட்டுக் கொண்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

இத்தகைய சமத்துவ உணர்வு – சமூகநீதி உணர்வு இந்தியா முழுமைக்கும் மலரும் ஆண்டாக தை தொடங்கும் ஆண்டு அமையப் போகிறது.

**பொங்க வேண்டியவைக்கும் பொங்கி சமநிலை கூட்டாட்சி அரசை ஒன்றிய அளவில் அமைப்போம்.**

●●

## மாதவரம் எஸ்.சுதர்சனம் பரிசு வழங்குகிறார்!

# புழல் 24 - வது வட்டத்தில் பொங்கல் விழா!

## கே.பி.சுந்தரேசன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 15 - புழல் 24-வது வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

புழல் 24 வது வட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இன்று (15.1.2024) காலை 10 மணிக்கு புழல் புனித அந்தோணியார் கோயில் தெருவில் அமைந்துள்ள வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் காலை 10 மணி அளவில் கழக முன்னோடிகளுக்கு தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் தினத்தை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் புத்தாடைகள் வழங்குகிறார்.

மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், பகுதி செயலாளர் ஜி.துக்காராம் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

எனவே கழகத் தோழர்கள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் இளைஞரணியினர் அனைவரும் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை 13.1.2024 அன்று முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து, வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியினை, தனது கோரிக்கையை ஏற்று 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டமைக்காக நன்றி தெரிவித்தும், “முத்துகள் மூன்று” என்ற தலைப்பில் தொகுக்கப்பட்ட தனது நூலினையும் வழங்கினார்.

## இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாடு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன.15- இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டுச் சிறையில் வாடும் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப்படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்கக்கோரி நேற்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள், 13.01.2024 அன்று நெடுந்தீவு அருகே மூன்று விசைப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவகாரத்தை இலங்கை அரசுடன் உரிய தூதரக வழிமுறைகள் மூலம் எடுத்துச் சென்று, இலங்கை சிறையில் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து

# “விபத்தில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடைவோம்!

## “சாலைப் பாதுகாப்பு மாதம்” - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன.15- “சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘சாலைப் பாதுகாப்பு மாதம்’ குறித்து வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சாலைப் பாதுகாப்பு மாதம் - வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சாலை விபத்துகளால் ஏற்படும் கொடுங்காயங்கள் மற்றும் இறப்புகளைத் தடுக்கும் பொருட்டு, சாலைகளில் பொதுமக்களின் பாதுகாப்பு மிகமிக அவசியமானதாகிறது. சாலையை உபயோகிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைபிடிப்பது நம் அனைவரின் கடமையாகும்.

நமது நாட்டில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு சனவரி 15 முதல் பிப்ரவரி 14 வரை “தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம்” அனுசரிக்கப்படுகிறது. சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் விபத்தில்லாப் பயணத்தை உறுதி செய்வது தேசிய சாலைப் பாதுகாப்பு மாத விழாவின் முக்கிய நோக்கமாகும்.

### விபத்தில்லா தமிழ்நாடு!

தமிழ்நாடு அரசின் “விபத்தில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடையும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2023-2024ஆம் ஆண்டிற்கு, சாலைப் பாதுகாப்பிற்காக அரசு 135 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியானது, குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் (Accident Hot Spots) கண்டறிந்து மேம்படுத்தவும், நவீன சமிக்ஞை விளக்குகள், சாலைக் கட்டமைப்புகள் மற்றும் சாலைத் தடுப்பான்களை நிறுவுவதற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

சாலைப்பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றத் தவறுவதால் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. தனிமனித நடத்தை, ஓட்டுநரின் உளவியல் நிலை, பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலையின் அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவைகளே சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணிகள் என பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், தற்போதைய மற்றும் வருங்கால சாலை உபயோகிப்பவர்களிடையே பாதுகாப்பான சாலைப் பயனாளர் நடத்தையை ஊக்குவிப்பதற்காக சாலைப் பயனாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை வழங்குவது அரசின் முக்கிய நோக்கமாகும்.

### மாணவர்களுக்கு விழிப்புணர்வு!

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் “இன்னுயிர் காப்போம் : நம்மைக் காக்கும் 48” என்ற சீர்மிகு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்றவகையில், சாலை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கும்பொருட்டு, மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உடனடி விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் அனைத்து அரசு மற்றும் அரசு சாரா பள்ளிகளில் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த சாலைப்பாதுகாப்பு மாதத்தில், அரசானது வாகனத்தை இயக்கிவரும் ஓட்டுநர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதசாரிகள் சாலையை கடப்பதற்கு நடைமேம் பாலங்கள் மற்றும் சுரங்க நடைபாதைகள் ஆகியவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முழுவதும் நடத்த திட்டமிட்டுள்ளது.

உயிர் வாழ்வதற்கான மற்ற அடிப்படைத் திறன்களை போல சாலைப் பாதுகாப்புக் கல்வியும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, சாலை விதிகளை முழுமையாகக் கடைபிடித்து விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய நாம் அனைவரும் பொறுப்புடன் செயல்படுவோம்.

சாலை விதிகளை மதித்தால், விபத்தில்லா பயணம் சாத்தியமே !!

விதிகளை மதிப்போம்! வேதனைகளைத் தவிர்ப்போம் !!

சாலைப் பாதுகாப்பு
நம் உயிர் பாதுகாப்பு!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.





தாம்பரம் மாநகர தி.மு.க. மற்றும் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் மேற்கு தாம்பரம் டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு தொடர் நிகழ்ச்சியாக 4 இடங்களில் 5000 பேருக்கு புத்தாடை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பினை கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் வழங்கினார். உடன் எஸ்.ஆர்.ராஜா எம்.ல்.ஏ., மண்டல குழுத்தலைவர், பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் மற்றும் மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## அண்ணாமலையின் மும்மொழிக் கொள்கை என்ற பகல் கனவுக்கு இங்கு வாய்ப்பில்லை!

# தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே தொடரும்!

## தமிழ்நாடு அரசு திட்டவட்டம்!

**சென்னை, ஜன. 15 -**

**தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே தொடரும் என்றும் அண்ணாமலையின் மும்மொழிக் கொள்கை என்ற பகல் கனவுக்கு இங்கு வாய்ப்பில்லை என்றும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

பள்ளி மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவை ஊட்டுவதற்காக மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது தமிழ்நாடு அரசு. அதன்படி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவில் பயிற்சியளிப்பதற்காக "மைக்ரோசாஃப்ட் TEALS திட்டம்" என்னும் ஒரு திட்டத்தை நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வந்திருக்கிறது.

**வரலாற்றை மாற்றவோ, திரிக்கவோ கூடாது!**

இதுகுறித்து பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத்தலைவர் அண்ணாமலை கூறுகையில். இது தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட திட்டம் என்று தெரிவித்திருந்தார். மேலும் வெகு விரைவில் மும்மொழிக் கொள்கையையும் தமிழ்நாடு அரசு கொண்டுவரும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அண்ணாமலை வரலாற்றை மாற்றவோ திரிக்கவோ முயலக்கூடாது. தமிழ்நாடு அரசு அவரது கூற்றை முற்றிலும் நிராகரிக்கிறது.

**தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வை!**

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டுக்கென்று வரலாறும் பாரம்பரியமும் உண்டு. 1970 ஜூலை 16ஆம் தேதி அன்றைய கிண்டி பொறியியல் கல்லூரியில் (இன்றைய அண்ணா பல்கலைக்கழகம்) நடந்த தமிழ்மன்ற விழாவில் தந்தைபெரியார் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கு சென்ற தந்தை பெரியாரிடம் கல்லூரிக்கு என புதிய கம்ப்யூட்டரை வாங்கி இருப்பதாக அங்கு இருக்கும் பேராசிரியர்கள் தெரிவிக்க அதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டார். பெரியார் படியேறிச் செல்ல முடியாத முதுமையில் இருந்தாலும், முதல் மாடிக்கு தன்னை தூக்கிச் செல்லுமாறு வேண்டி, அங்கு சென்று அந்த கம்ப்யூட்டரைப் பார்த்தார். அப்போது அதற்கு கணினி என்கிற பெயர் வைக்கப்படவில்லை. ஐ.பி.எம் கம்ப்யூட்டர் 1620 மாடல்கணினி அது. எந்த தேதியைச் சொன்னாலும் அதன் கிழமையை மிகச்சரியாக அக்கணினி சொல்லிவிடும் என்கிற செய்தியை அங்குள்ள பேராசிரியர்கள் சொல்ல பெரியார் சில தேதிகளை சொல்லி, கிழமை சரியாக வருகிறதா என்று பார்த்தார். தன்னுடைய பிறந்த நாளையும் அவர் சொல்ல சரியாக சனிக் கிழமை என்று கூறியது அந்தக் கணினி. அவரிடம் இந்த கணினி பற்றி கூறியது அன்றைய பேராசிரியரும் பின்னாளில் துணைவேந்தரும் ஆன வா.செ.குழந்தைசாமி அவர்கள்.

வருங்காலத்தில் ஒவ்வொருவரின் சட்டைப் பையிலும் ஒருதகவல் தொடர்பு கருவி இருக்கும் என்று இன்றைய செல்போன் குறித்து அன்றே கணித்து சொன்னவர் பெரியார்.

**தொழில் நுட்பத் துறையில் கலைஞர் உருவாக்கிய தனி கொள்கை!**

இதன் தொடர்ச்சியாக 1997லேயே அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்து தமிழ்நாட்டுக்கென தனியே தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை ஒன்றை உருவாக்கி, தனியாக ஒரு துறையை உருவாக்கி அதற்கென ஒரு அமைச்சரை நியமித்தார். தகவல் தொழில்நுட்பத்துறை பற்றி நாட்டின் பிற மாநிலங்கள் இதுகுறித்து பெரிதும் விழிப்புணர்வு அடையாத கால கட்டத்திலேயே தொலைநோக்குப் பார்வையோடு கலைஞர் அவர்கள் சிந்தித்து இதற்கான திட்டங்களைத் தீட்டினார். டைடல்பார்க் போன்ற கட்டமைப்புகளை மாநிலத்தில் உருவாக்கி உலக நிறுவனங்களின் முதலீட்டு மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டினார். இதன்மூலம் சென்னை ஒரு ஐ.டிஹப் ஆக மாறியது இன்றைக்கு பழைய மகாபலிபுரம் சாலை முழுவதும் காணப்படும் ஐ.டி. நிறுவனங்கள் அனைத்திற்கும் அன்றே வித்திட்டது அன்று கலைஞர் அவர்கள் உருவாக்கிய தனி கொள்கை தான்

### அரசுத் துறைகளை கணினிமயமாக்கியது கலைஞர் செய்த தகவல் தொழில்நுட்பப் புரட்சி!

இதையடுத்து அரசுத் துறைகளை கணினி மயமாக்கியது கலைஞர் அவர்கள் செய்த தகவல் தொழில்நுட்பப் புரட்சி. Egovernance எனப்படும் மின் நிர்வாக முறையை முதன் முதலில் திருவாரூர் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தினார். அதன் தொடர்ச்சியாகவே குக்கிரா மங்கள் தொடங்கி தலைநகரம் வரை படிப்படியாக ஒவ்வொரு துறையும் கணினி மயமாகி ஊழியர்களின் பணிச் சுமையை குறைத்தது. தகவல் சேமிப்பும் எளிதாகி இருக்கிறது.

**செயற்கை நுண்ணறிவுக்கென 2020 - லேயே தனி கொள்கை!**

இந்த தொடர் ஓட்டத்தின் தொடர்ச்சியாக செயற்கை நுண்ணறி வுக்கென தனியே ஒரு கொள்கை தமிழ்நாட்டில் 2020ல் உருவாக்கப்பட்டது. தேசிய கல்விக் கொள்கை என்கிற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இவையெல்லாம் நடந்தன.

தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அதில் மாநிலங்கள் அடைய வேண்டிய இலக்குகள் என்று சொல்லப்பட்டிருக்கும் பலவற்றை தமிழ்நாடு ஏற்கனவே அடைந்துவிட்டது. எடுத்துக்காட்டாக தேசிய அளவில் மாணவர் சேர்க்கை விகிதத்தை 50 % ஆக ஆக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. ஆனால் அகில இந்திய மேல்நிலைக் கல்வி ஆய்வறிக்கையின்படி (All India Survey of Higher Education (AISHE) தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 51.4சதிவிகிதத்தை 2019-20 கல்வியாண்டிலேயே எட்டி விட்டது. 2035 ஆம் ஆண்டுக்குள் 50 சதவிகிதத்தை எட்ட வேண்டும் என இலக்கு நிர்ண யித்திருக்கிறது தேசிய கல்விக் கொள்கை. ஆனால் தமிழ்நாடு100 சதவீதத்தையே 2035ல் எட்டிவிடும்.

**தமிழ்நாட்டிற்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை!**

தமிழ்நாடு அரசு செய்ததை, செய்து கொண்டிருப்பதை தேசிய கல்விக் கொள்கையில் இணைத்து விட்டு தேசிய கல்விக்கொள்கையின் படி தமிழ்நாடு செயல்படுகிறது என்று சொல்வது நகைப்புக்குரியது. குறிப்பாக தொழில்நுட்பம் சார்ந்து தமிழ்நாட்டுக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை. நாட்டின் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு எப்பொழுதும் தொழில் நுட்பத் துறையில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு முன்னோடி மாநிலமாகவே திகழ்ந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர்.

முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங் போன்றவற்றில் வருங்காலத்தில் மிகத் தீவிரமாக பயிற்சிகள் அளிக்கப்படும். ஏனெனில் செயற்கை நுண்ணறிவை கையிலெடுக்கும் மாநிலமே இன்னும் பத்தாண்டுகளில் முன்னணி மாநிலமாக இருக்கப் போகிறது.

**பெரியார் காட்டிய பாதையில் அரசு செயல்படும்!**

பெரியார் காட்டிய பாதையில் தமிழ்நாடு அரசு முற்போக்குப் பாதையில் செல்லும் அரசாகவே செயல்படும். அண்ணாமலை பகல் கனவு காண்பது போல மும் மொழிக் கொள்கை ஒருபோதும் தமிழ்நாட்டில் உருவாக்க வாய்ப்பு இல்லை; இருமொழிக் கொள்கையே தொடரும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

### விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்துக்கு 15.01.2024 - திங்கள் மற்றும் 16.01.2024 - செவ்வாய் ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே முரசொலியின் அடுத்த இதழ் 18.01.2024 வியாழன் அன்று வழக்கம் போல் வெளிவரும்.

**- தலைமை நிர்வாகி**
**முரசொலி**

## காவல் துறையில் பல நிலைகளில் பணியாற்றும் 3,184 பேருக்கு

# தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜன. 15 -**

**2024 பொங்கல் திருநாளையொட்டி, 3,184 தமிழ்நாடு காவல் துறை மற்றும் சீருடை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர், காவலர் நிலை1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3000 பணியாளர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல்பதக்கங்கள் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர் (சிறப்பு நிலைய அலுவலர்), முன்னணி தீயணைப்போர், இயந்திர கம்மியர் ஓட்டி (சிறப்பு நிலைய அலுவலர் (போக்குவரத்து), இயந்திர கம்மியர் ஒட்டி, தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னனி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 119 அலுவலர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல்நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண் மற்றும் பெண்) நிலைகளில் 59 பேர்களுக்கும் "தமிழக முதலமைச்சரின் சிறப்புபணிப் பதக்கங்கள் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலை வேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400/ 2024, பிப்ரவரி 1ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்பநாய்படைப் பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் என ஆக மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் தொழில் நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும்.

இவர்கள் அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு விழாவில் பதக்கம் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.




தென்காசியில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட செசன்ஸ் நீதிமன்றம் மற்றும் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மன்றங்கள் திறப்பு விழா நிகழ்வு குற்றாலம் காசி மேஜர்புரம் ஸ்ரீ முருகன் மஹாலில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்காபூர் வாலா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று உரையாற்றினார். உடன் உயர்நீதிமன்ற நீதிபதிகள் இளங்கோவன்,சுரேஷ்குமார், மாவட்ட ஆட்சியர் ரவிச்சந்திரன் உள்பட நீதிபதிகள் பலர் உள்ளனர்.

**மு.க. ஸ்டாலின்**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**தலைமைச் செயலகம்**
**சென்னை – 600 009.**

நாள்: 13–1–2024

**சாலைப் பாதுகாப்பு மாதம் - வாழ்த்துச் செய்தி**

சாலை விபத்துகளால் ஏற்படும் கொடுங்காயங்கள் மற்றும் இறப்புகளைத் தடுக்கும் பொருட்டு, சாலைகளில் பொதுமக்களின் பாதுகாப்பு மிகமிக அவசியமானதாகிறது. சாலையை உபயோகிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைபிடிப்பது நம் அனைவரின் கடமையாகும்.

நமது நாட்டில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு **ஜனவரி 15 முதல் பிப்ரவரி 14 வரை "தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம்"** அனுசரிக்கப்படுகிறது. சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் விபத்தில்லாப் பயணத்தை உறுதி செய்வது தேசிய சாலைப் பாதுகாப்பு மாத விழாவின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசின் **'விபத்தில்லா தமிழ்நாடு'** என்ற இலக்கினை அடையும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2023–2024ஆம் ஆண்டிற்கு, சாலைப் பாதுகாப்பிற்காக அரசு 135 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியானது, குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் (Accident Hot Spots) கண்டறிந்து மேம்படுத்தவும், நவீன சமிக்ஞை விளக்குகள், சாலைக் கட்டமைப்புகள் மற்றும் சாலைத் தடுப்பான்களை நிறுவுவதற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றத் தவறுவதால் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. தனி மனித நடத்தை, ஓட்டுநரின் உளவியல் நிலை, பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலையின் அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவைகளே சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணிகள் என பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், தற்போதைய மற்றும் வருங்கால சாலை உபயோகிப்பவர்களிடையே பாதுகாப்பான சாலைப் பயனாளர் நடத்தையை ஊக்குவிப்பதற்காக சாலைப் பயனாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை வழங்குவது அரசின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் **"இன்னுயிர் காப்போம் : நம்மைக் காக்கும் 48"** என்ற சீர்மிகு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்றவகையில், சாலை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கும்பொருட்டு, மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உடனடி விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் அனைத்து அரசு மற்றும் அரசு சாரா பள்ளிகளில் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த சாலைப் பாதுகாப்பு மாதத்தில், அரசானது வாகனத்தை இயக்கிவரும் ஓட்டுநர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதசாரிகள் சாலையை கடப்பதற்கு நடைமேம்பாலங்கள் மற்றும் சுரங்க நடைபாதைகள் ஆகியவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முழுவதும் நடத்த திட்டமிட்டுள்ளது.

உயிர் வாழ்வதற்கான மற்ற அடிப்படைத் திறன்களை போல சாலைப் பாதுகாப்புக் கல்வியும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, சாலை விதிகளை முழுமையாகக் கடைபிடித்து விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய நாம் அனைவரும் பொறுப்புடன் செயல்படுவோம்.

**சாலை விதிகளை மதித்தால், விபத்தில்லா பயணம் சாத்தியமே !!**
**விதிகளை மதிப்போம்!! வேதனைகளைத் தவிர்ப்போம் !!**
**சாலைப் பாதுகாப்பு நம் உயிர் பாதுகாப்பு !!**

**அன்புடன்,**

**(மு.க. ஸ்டாலின்)**
தமிழ்நாடு முதலமைச்சர்

செமதொஇ/ 46 /வரைகலை/2024




நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை சார்பில் கேலோ இந்தியா விழிப்புணர்வு வாகனத்தை சட்டப் பேரவைத் தலைவர் முஅப்பாவு, மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்,துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.




மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் இறுதிகட்ட கட்டுமான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### ஜன.12 அன்று நடைபெறும் கழக இளைஞர் அணி 2வது மாநாட்டில்

# சேலம் மத்திய மாவட்டத்தில் இருந்து 30 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சேலம், ஜன. 15-

சேலம் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 30 ஆயிரம் இளைஞரணி தொண்டர்கள் கலந்து கொள்கிறார்கள்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு. க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர். ஜி. கே.சுபாசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழகச் செயலாளர். இரா. இராஜேந்திரன் எம். எல். ஏ. சிறப்புரை யாற்றினார்

இக்கூட்டத்தில் கீழ கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

சேலம் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் நம் உயிர ணைய கழக தலைவர் எழுச்சியுரையாற்றுகிறார்கள். கழக இளைஞரணி செயலாளர். இளந்தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்துவதற்காக ஜனவரி 20ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு சேலம் விமான நிலையம் வருகிறார்கள் அவர்களுக்கு ஓமலூர் சட்ட மன்ற தொகுதியில் உள்ள ஒன்றியங்கள் சார்பில். விமான நிலையம் அருகே எழுச்சி மிகு வரவேற்பும். கொண்டலாம் பட்டி ரவுண்டான பகுதியில் சேலம் மாநகரத்தின் சார்பில் வரவேற்பு வழங்கப்படுகிறது.

முதல்வர் மு.க. ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்பங்கேற்கும் தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் -மக்களவை கழக குழு தலைவர் கனிமொழி கழக கொடியேற்றுகிறார்கள். இந்த நிகழ்ச்சியி லும் மாநாட்டிலும், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞரணியினர் 30 ஆயிரம் பேர் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது மேற்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# மதுரை தெற்கில் சமத்துவ பொங்கல் விழா!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை, ஜன 14-

மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அனைவரும் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகளாய், சமத்துவமாக வாழ்கிறோம் என்பதை பறைசாற்றும் வகையில் அனைத்து மதத்தினரும், சாதியினரும் கலந்து கொள்ளும் நல்லிணக்கத்துக்கான சமத்துவ பொங்கல் திருவிழா 234 பொங்கல் பானைகளில் பொங்கல் வைத்தல் நிகழ்வும்,

500 பெண்கள் பங்கேற்கும் கோலப்போட்டியும்,

தமிழக வீர விளையாட்டுக்களில் ஒன்றான கபடி போட்டி மற்றும் இதர விளையாட்டுப் போட்டிகள் இன்று 15.01.2024 திங்கள் கிழமை காலை 9.00 மணி அளவில் திருமங்கலம் அருகேயுள்ள முத்தப்பன் பட்டி சேடபட்டியார் திடல் முன்பாக மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த சமத்துவ பொங்கல் திருவிழாவில் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்ட வார்டு கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழகங்களின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாது குடும்பத்துடன் சரியாக நாளை காலை 08.45 அளவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் சிறப்புரை!

தென்காசி, ஜன.15-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இலஞ்சி டிரஸ்ஸில் அரங்கில் மாவட்ட அவை தலைவர் மாவடிக்கால் சுந்தர மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட துணை செயலாளர் கனிமொழி வரவேற்புரை ஆற்றினார்.தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் அப்துல்காதர், மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி,தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் ஷெரிப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்துப்பாண்டி,செல்லதுரை,சேசுராஜன், ஷேக் தாவுது,பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன், சாமிதுரை, அருள், சமுத்திர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், மாரிவண்ண முத்து,செல்லதுரை, அன்பழகன்,சீனித்துரை, சிவன் பாண்டியன், ஜெயக்குமார்,ரவிசங்கர், திவான் ஒலி,சுரேஷ், மகேஷ் மாயவன், நகர செயலாளர்கள்சாதிர்,அப்பாஸ், வெங்கடேசன்,பேரூர் செயலாளர்கள்சுடலை,லட்சுமணன், நெல்சன்,ஜெகதீஷ், முத்தையா,குட்டி என்ற சங்கர், ராஜராஜன்,கோபால், வெள்ளத்துரை,

சிதம்பரம்,முத்து,பண்டாரம்,அழகேசன், முகமது உசேன்,தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பண் ஹபிபூர் ரகுமான்,தென்காசி நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா,மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, தங்கராஜ் பாண்டியன்,பரமசிவன், முருகன், கோமதிநாயகம்,இசக்கிபாண்டியன், ரமேஷ்,முத்துக்குமார், இஞ்சி இஸ்மாயில், குமார்,ராஜாமணி, சங்கீதா, திவ்யா மணிகண்டன்,துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சிவக்குமார், சுப்பிரமணியன்,முகமது, அப்துல் ரஹீம்,முகைதீன் கனி, சண்முகநாதன்,கனல் காஜா,கனி, மோகன்ராஜ்,மணிகண்டன்,முகமது அலி, ஜின்னா,ஜீவானந்தம், சுரேஷ், வெல்டிங் மாரியப்பன்,சுதன்,வாசுதேவன், ஆனந்தன், சுந்தர்ராஜன்,குற்றாலம் இசக்கி பாண்டியன்,சேக்பரீத்,மைதீன், இசக்கி முத்து,செல்வம்,சுரேஷ், கல்யாணசுந்தரம்,முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட துணை செயலாளர் கென்னடி நன்றி உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று தென்காசி தெற்கு மாவட்டம் முழுவதும் கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து புதிய கொடி யேற்றி இனிப்பு வழங்க வேண்டும் என்றும்.

இம்மாதம் 21 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் 2வது மாநில இளைஞர் அணி மாநாட்டில் தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி அழைத்து செல்வது என்றும்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பாக முகவர்கள் பணியை விரைவாக முடித்து தலைமை கழகத்தில் ஒப்படைப்பது என்றும்.

தமிழகத்தில் சமீபத்தில் பெய்த வரலாறு காணாத அதிகனமழை வெள்ளத்தை சிறப்பாக கையாண்டு, தமிழ்நாட்டை பாதுகாத்த முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கடுமையான நிதி நெருக்கடியில் மழை வெள்ள நிவாரணமாக தென்காசி மாவட்டத்திற்கு அனைத்து குடும்ப அட்டையாளர்களுக்கும் ரூபாய் 1000,ம் வழங்கிய முதலமைச்சர் அவர்களின் கருணை உள்ளத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் போன்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

### அமைச்சர் பி.கே.சேபர்பாபு துவக்கி வைக்கிறார்!

# துறைமுகம் பகுதியில் பொங்கல் விழா!

## எஸ்.முரளி - மா.ஜெய்சங்கர் பங்கேற்பு!

சென்னை, ஜன.15-

துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் சமத்துவ பொங்கல் விழா அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார், முன்னிலை பகுதி செயலாளர் எஸ்.முரளி, தலைமை வட்ட செயலாளர்கள் மா. ஜெய்சங்கர், பா கதிரவன்.

கழகத் தலைவர், தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க, சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் வட்ட கழக செயலாளர் மா.ஜெய்சங்கர் தலைமையில் 200 மகளிர்கள் பங்குபெறும் சமத்துவ பொங்கல் விழா, கொண்டித்தோப்பு, சிவஞானம் பூங்கா அருகிலும், 54அ வட்டத்தில், வட்ட கழக செயலாளர் பா. கதிரவன் தலைமையில் 400 மகளிர்கள் பங்குபெறும் சமத்துவ பொங்கல் விழா மற்றும் பொங்கல் பரிசுகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கி வாழ்த்துக்களை வழங்கவுள்ளார்.

பகுதி செயலாளர் எஸ். முரளி, எஸ்.ராஜசேகர் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், மண்டல குழு தலைவர் ப.ஸ்ரீராமுலு முன்னிலை வகிக்கின்றனர்.

இச்சமத்துவப் பொங்கல் விழாவில் பொதுமக்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக, அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# குன்றாண்டார்கோவில் ஒன்றிய தி.மு.க. சார்பில் நம்ம ஊர் திருவிழா!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!


புதுக்கோட்டை, ஜன. 15 -

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் குன்றாண்டார்கோவில் ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் விசலூர் ஆலடி கருப்பர் கோவிலில் நம்ம ஊர் திருவிழாசமத்துவ பொங்கல் மற்றும் கலை பண்பாட்டு திருவிழா நூற்றுக் கணக்கானோர் பொங்கலிட்டு, நாட்டுப்புற தெம்மாங்கு இசை நிகழ்ச்சிகளும், சிலம் பாட்ட சாகச வீர கலைகளும் இடம் பெற்று விசலிக் கோவில் குருக்கள், கீரனூர் பள்ளிவாசல் ஹஜ்ரத், கிள்ளுக் கோட்டை ஆலய பாதிரியர் ஆகிய மும்மத குருமார்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக தமிழர் திருநாள் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர்ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர். என்.போஸ், மாவட்ட துணைச் செயலாளர்கள் பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையன், புதுக்கோட்டை நகரச் செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய கழக செயலாளர்கள் என். சேட்டு, தவ.பாஞ்சாலன், சி.சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.சாமிநாதன்,

மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் த.செல்வம், சி.சின்னராஜ், ஒன்றியதுணைபெருந்தலைவர் சித்ரா ரவிச்சந்திரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முனைவர் செ.குறிஞ்சிவானன், வி.என்.எம்.பால முருகன், சி.அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், தவசுமணி முருகேசன், மு. கலைஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன், ஆ.ராஜேந்திரசோழன், காதர்கனி, பெ. தெய்வானை, ஆர். கே.ரெத்தினசபாபதி, ஜெயந்தி, டாக்டர் எஸ். வி.ஆர்.அர்வின்,

சதீஷ், ஒன்றிய நிர்வாகிகள் வீரசிங்கம், கருணாநிதி, மணிவேல், திவ்யநாதன், அழகு ராஜேந்திரன், வீரக்குடி ராஜ்குமார், செங்களூர் இளையராஜா, கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.கலையரசன், சி.இளையராஜா, வீ.கனக ரெத்தினம், KPM.செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி எழில் ராஜா, ராஜாராம் மற்றும் ஏராளமான கிளை கழக நிர்வாகி கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், சமத்துவ பொங்கல் விழா, 17வது வட்டம் கொசப்பூர் டாக்டர் அம்பேத்கர் நகரில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது. இவ்விழாவில், பொதுமக்களும், தூய்மை பணியாளர்களும், தாய்மார்களும், அங்காள பரமேஸ்வரி கோயில் எதிரே புது பானையில் பச்சரிசி வெல்லம், கலந்து பொங்கலிட்டனர்.

# ஆலத்தம்பாடி வெள்ளை நடராஜன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!


திருவாரூர்.ஜன15.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் ஆலத்தம்பாடி ஊராட்சியை சேர்ந்த கழக மூத்த முன்னோடியான எல்லோராலும் “வெள்ளை நடராஜன்” என்று அன்போடு அழைக்கப்படும் நடராஜன் அவர்கள் வயது முதிர்வால் மறைவெய்தினார்.அவருக்கு வயது 74.



மறைந்த வெள்ளை நடராஜனுக்கு ஜெயலட்சுமி என்கிற மனைவியும், மணிவண்ணன் என்கிற மகனும் , கற்பகம், அறிவுக்கண்ணன் என்கிற மகள்களும் உள்ளனர். மறைந்த வெள்ளை நடராஜன் கழகத்தின் மூத்த உறுப்பினராவார். தனது 24வயதில் கழகத்தில் உறுப்பினரான வெள்ளை நடராஜன் தனது இறுதி மூச்சுவரை கழகத்திற்காக பணியாற்றிவர் . கழகம் அறிவிக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் ,ஆலத்தம்பாடி கிளை கழக அமைப்பில் பல்வேறு பொறுப்புகளிலும் இருந்து கழக நிர்வாகிகளின் நன்மதிப்பை பெற்றவர் என்பதும் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்ட பொற்கிழியை பெற்று அங்கீகரிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவின் தகவலறிந்த கழக நிர்வாகிகள், ஆலத்தம்பாடியில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த வெள்ளை நடராஜனின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் பேரூர் கழக செயலாளர் மு.தேவராஜ் ஏற்பாட்டில் பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டன. இதில் மாவட்ட பிரதிநிதிகள் அஸ்கர் அலி, சந்திரன், பலராமன், பரசுராமன், வாணி ஏழுமலை, மு.க.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ‘இந்தியா’வை மீட்க இளைஞர் அணி அழைக்கிறது!

# தோள்தட்டி வாரீர் திராவிட வீரர்களே!

## சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!



மாநில உரிமை மீட்பு முழக்கம்



**நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளை, உங்களில் ஒருவராகத் திகழும் நம் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அன்பிற்குரிய கோடானு கோடி கழகத் தொண்டர்களில் ஒருவனான நான் இந்தக் கடிதத்தின் வாயிலாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!**

மாநில உரிமை மீட்பு முழக்கமாக நம் கழகத்தின் பெருமைமிகு இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21 ஆம் தேதி நடைபெறவிருக்கிற நிலையில், நீங்கள் அனைவரும் மாநாட்டுப் பணிகளுக்காகத் தீவிரமாகச் செயலாற்றி வருவதை நான் அறிவேன்.

டிசம்பர் மாதமே நடைபெற்றிருக்க வேண்டிய மாநாடு என்றாலும், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் - வெள்ளம் மற்றும் தூத்துக்குடி - திருநெல்வேலி - தென்காசி - கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையாலும், அங்கு பெருக்கெடுத்த வெள்ளத்தாலும், மாநாட்டினை ஜனவரி 21 ஆம் தேதி நடத்துகிறோம்.

“மக்களிடம் செல் - மக்களுடன் வாழ் - மக்களிடமிருந்து கற்றுக்கொள் - மக்களுக்கான அரசியலை செய்” என்றார் நம் பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் சொற்களுக்கேற்ப, பேரிடர் நேரத்தில் மக்களுடன் மக்களாக களத்தில் நின்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை நம் கழகத்தினர் மேற்கொண்டனர்.

### பா.ஜ.க. ஏற்படுத்தியுள்ள பேரிடர்

இயற்கைப் பேரிடரிலிருந்து இயல்பு நிலையை மீட்டெடுத்து விட்டோம். ஆனால், ஒன்பதரை ஆண்டு காலமாக பா.ஜ.க. ஏற்படுத்தியுள்ள பேரிடரிலிருந்து ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தையும் மீட்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உள்ளது. அதற்கான பணிகளை ஆக்கப்பூர்வமாக மேற்கொண்டிட வேண்டுமென நம்முடைய தலைவர் அவர்கள் நமக்களித்த வாய்ப்பு தான் ‘இளைஞர் அணி மாநில மாநாடு’.

உங்கள் எல்லோரையும் வரும் ஜனவரி 21-ஆம் தேதி சேலத்தில் நடைபெறவிருக்கும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் சந்திக்கப் போகிறேன் என்று நினைக்கும்போது உள்ளமெல்லாம் உற்சாகம் பெருகி நிற்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் - கழகத்தின் பவள விழா ஆண்டில், இளைஞரணியின் 2 ஆவது மாநில மாநாடு நடைபெறுகிறது.

இந்தத் தருணத்தில் நாம் இளைஞர் அணியில் இருப்பதே நமக்கெல்லாம் பெருமை.

சேலம் மாநாட்டுக்கு, சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே 100 ஏக்கர் பரப்பளவில் லட்சக்கணக்கானோர் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் பிரம்மாண்ட ஏற்பாடுகளை நமது கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு செய்து வருகிறார்.

பெரியார் நுழைவு வாயில் - அண்ணா திடல் - கலைஞர் அரங்கம் - பேராசிரியர் மேடை - வீரபாண்டியார் கொடி மேடை - முரசொலி மாறன் புகைப்பட கண்காட்சி அரங்கு - வீரபாண்டி செழியன் - வீரபாண்டி ஆ.இராஜா - நீட் ஒழிப்பு போராளிகள் அனிதா - தனுஷ் என மாநாட்டு பந்தல் அமையவுள்ளது.

### உணர்ச்சி பொங்கும் இன்னிசை நிகழ்ச்சி!

மாநாட்டுக்கு முதல் நாளான ஜனவரி 20-ஆம் தேதி மாலை, தமிழ்நாடெங்கும் இளைஞர் அணி மாநில மாநாட்டை கொண்டு சேர்த்த, இரு சக்கர வாகனப் பேரணியானது, முதலமைச்சர் அவர்களின் முன்பாக மாநாட்டுத்திடலில் அணிவகுப்பு செய்கிறது.

தொடர்ந்து இளைஞரணி வரலாற்றை எடுத்துச் சொல்கிற வகையிலான புகைப்படக் கண்காட்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள். மாநாட்டுக்கு முதல் நாள் மாலை முழுவதும், அண்ணன் இறையன்பன் குத்தூஸ் குழுவினரின் உணர்ச்சி பொங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

> “இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களை எளிதில் ஈர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் உண்டு. சாதி உணர்வூட்டும், மதவெறியூட்டும் கட்சிகள் ஒருபுறம். அரசியலே சாக்கடை, அரசியல்வாதிகளே ரவுடிகள் என்று அரசியலற்ற (Apolitical) ஆர்வக்கோளாறுகள் வெட்டி வைத்திருக்கும் மேட்டுக்குடிவாதப் படுகுழி மறுபுறம். இவற்றையும், இன்னும் பலவற்றையும் தாண்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்காகவே உங்களை எல்லாம் ஆரத்தழுவிப் பாராட்டுகிறேன்.”

மாநாட்டு நாளான, ஜனவரி 21-ஆம் தேதி காலை கழக துணை பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், மாநாட்டை கொடியேற்றி வைத்து தொடங்கி வைக்கிறார்கள்.

### மாநில உரிமை மீட்பு முழக்கம்!

இளைஞரணியின் முதல் மாநில மாநாட்டை நெல்லையில் வெற்றிகரமாக நடத்திட்ட அன்றைய கழக இளைஞரணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் - முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நம்முடைய மாநில உரிமை மீட்பு முழக்கமான இளைஞர் அணி 2 ஆவது மாநாட்டில் சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதற்கு முன்பாக கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டத் தலைவர்கள், ஆற்றல்படைத்த கழகத்தின் சொற்பொழிவாளர்கள் இந்த மாநாட்டில் நாளெல்லாம் எழுச்சியுரையாற்ற இருக்கிறார்கள். தெருக்குரல் அறிவின் உணர்ச்சியூட்டும் கலை நிகழ்ச்சி – பாசிஸ்ட்டுகளின் கோர முகத்தை தங்கள் நையாண்டிக் கோடாரியால் பெயர்த்து எடுத்து வரும், புதுகை பூபாளம் கலைக்குழுவினரின் விழிப்புணர்வூட்டும் கலை நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களை எளிதில் ஈர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் உண்டு. சாதி உணர்வூட்டும், மதவெறியூட்டும் கட்சிகள் ஒருபுறம். அரசியலே சாக்கடை, அரசியல்வாதிகளே ரவுடிகள் என்று அரசியலற்ற (Apolitical) ஆர்வக்கோளாறுகள் வெட்டி வைத்திருக்கும் மேட்டுக்குடிவாதப் படுகுழி மறுபுறம். இவற்றையும், இன்னும் பலவற்றையும் தாண்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்காகவே உங்களை எல்லாம் ஆரத்தழுவிப் பாராட்டுகிறேன்.

நமது கழகம், அதன் வரலாற்றில் எத்தனையோ பெரிய மாநாடுகளை, திருப்புமுனை மாநாடுகளைக் கண்டிருக்கிறது. அந்த மாநாடுகளுள் ஒன்றை மட்டும் உங்களுக்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

1970ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருச்சியில் நடந்த மாநாடு. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த ஓராண்டுக்குப் பின், அண்ணா அவர்களில்லாமல் நடைபெற்ற முதல் தி.மு.கழக மாநாடு. அது மாவட்ட மாநாடு தான் என்றாலும் ஒரு மாநில மாநாடு போல பிரம்மாண்ட ஊர்வலத்துடன் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தான்,

**1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்,**

**2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்,**

**3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,**

**4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்,**

**5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி எனும் இந்த ஐம்பெரும் முழக்கங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள் என்பது நமக்கு தெரியும். அந்த மாநாட்டுக்கென்று மற்றொரு சிறப்பும் உண்டு.**

### உலக அரங்கில் புகழ்பெற்ற உரைகள்!

உலக அரங்கில் புகழ்பெற்ற உரைகள் என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்த வரிசையில் வைத்துப் பார்க்கும் அளவுக்கான ஓர் உரையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றினார். எல்லோரையும் வளர்த்து ஆளாக்கிய அண்ணா இல்லாத நிலையில், கழக முன்னணியினரை எப்படி அரவணைக்க வேண்டும், தொண்டர்களுக்கு எப்படி தெம்பூட்ட வேண்டும் என்பதற்கு உதாரணமாய் அமைந்த அந்த உரையின் முற்பகுதி நெஞ்சுக்கு நீதி நூலில் இடம்பெற்றுள்ளது. அதை எப்போது படித்தாலும் எனது கண்கள் கலங்கும்.

அந்த மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்த முன்னணித் தலைவர்கள் நாவலர் அவர்கள், மதியழகன் அவர்கள், சிற்றரசு அவர்கள், என்.வி.என் அவர்கள், பேராசிரியர் அன்பழகன் தாத்தா, மதுரை முத்து அவர்கள், மன்னை நாராயணசாமி அவர்கள், அன்பில் தர்மலிங்கம் தாத்தா என ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு, கலைஞர் அவர்கள் பேசுவார்.

**"நாவலர் இங்கே இருக்கிறார், நீ எங்கே போய்விட்டாய் அண்ணா?" என்று ஒவ்வொரு தலைவருக்கும் அண்ணாவுக்கும் இருந்த நெருக்கத்தை எடுத்துச் சொல்லி "அவர் இங்கே இருக்கிறார், நீ எங்கே போனாய் அண்ணா?" என்று தொடர்ந்து கேட்டுவிட்டு, கலைஞர் அவர்கள் உருக்கமாய்ப் பேசுவார்கள், "அண்ணா, நீ இங்கே தானிருக்கிறாய். இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த ஆரவாரத்தைக் காண்கிறாய், இங்கே இருக்கின்ற உன்னுடைய அருமைத் தங்கைகளையெல்லாம் பார்க்கிறாய். தம்பிகளின் பட்டாளங்களைக் காண்கிறாய். மலர் போன்ற மழலைக் குழந்தைகளின் இதழ் ஓரத்தில் முத்தமிடுகிற அண்ணனே, நீ எங்கும் போகவில்லை. இங்கேதான் இருக்கிறாய்! இங்கேதான் இருக்கிறாய்! எங்களுடைய நெஞ்சங்களில்தான் இருக்கிறாய் அண்ணனே! இங்கேதான் இருக்கிறாய்!" தங்களுக்கு எல்லாமுமாக இருந்த பேரறிஞர் அண்ணா உடலால் மறைந்திருந்தாலும் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரின் முகத்தையும் அண்ணாவின் முகமாகப் பார்த்தார் கலைஞர் அவர்கள்.**

**இப்போது, சேலத்தில் நாம் கூடவிருக்கிற திமுகவின் இளைஞரணி மாநாடும் அப்படி தான். கலைஞர் அவர்கள் மறைந்த நிலையில் நம் கழக இளைஞரணி நடத்தும் முதல் மாநில மாநாடு. எப்படி திருச்சி மாநாட்டில் மறைந்த அண்ணா பங்கேற்றாரோ, அதே போல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் நம்முடைய மாநாட்டில் பங்கேற்கப் போகிறார். இந்த மாநாட்டில் நம் கழக முன்னணித் தலைவர்களைப் பார்க்கும்போதும், இளைஞரணித் தோழர்களாகிய உங்கள் ஒவ்வொருவரின் முகத்தைப் பார்க்கும்போதும் எனக்கு கலைஞர் அவர்களின் முகமாகத் தான் தெரியும்.**

### மாநாட்டின் வெற்றி!

சேலம் மாநாட்டில் நாம் கூடப்போகும் எண்ணிக்கையையும் கட்டுப்பாட்டையும் பார்த்து "இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு திராவிட இயக்கத்தை யாராலும் அழிக்க முடியாது" என்று நமது கலைஞர் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்த மாநாட்டின் வெற்றி அமைய வேண்டும். ஏற்கனவே, ஒரு நூற்றாண்டை தாண்டியது நமது இயக்கம். கடந்துபோன அந்த நூற்றாண்டு நமது இயக்கத்துக்கு பலமான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது.

நமது இயக்கத்தின் தொடக்க நாட்களில் கூட்டங்கள் நடத்துவது, பிரசாரம் செய்வது, கழகக் கொடியேற்றுவது எல்லாம் சாதாரணமான விஷயமல்ல. மேடையில் நமது தலைவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, கற்களை வீசித் தாக்குவார்கள். அதற்கெல்லாம் அஞ்சாமல் தோளில் கிடந்த துண்டை எடுத்து முண்டாசுக் கட்டிக் கொண்டு இன்னும் வேகமாகப் பேசியிருக்கிறார்கள். பிரசாரத்தைக் கலைக்க கூட்டத்திற்கு இடையில் கழுதைகளையும் மாடுகளையும் விரட்டிவிட்டார்கள்.

நம் ஊர்வலம் செல்லும் வழிகளில் செருப்புத் தோரணம் கட்டி அவமதித்தார்கள். தந்தை பெரியார் நடத்திய மதுரை கருஞ்சட்டை மாநாட்டுப் பந்தல் தீவைத்து கொளுத்தப்பட்டது. புதுச்சேரியில் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே தாக்கி சாலையோரத்தில் போட்டுவிட்டுப் போனார்கள்.

தூத்துக்குடி கே.வி.கே.சாமி போன்ற இயக்கச் செயல்வீரர்கள் சிலர் படுகொலையும் செய்யப்பட்டார்கள். போராட்டங்களில் பங்கேற்றத் தொண்டர்கள் சிறைகளில் சித்திரவதைச் செய்யப்பட்டார்கள். நம் உயிருக்கு நிகரான தமிழ் மொழியைக் காக்க நம் கழகத் தொண்டர்கள் பலர் தங்கள் இன்னுயிரை ஈந்தார்கள். இந்த இயக்கத்தை வளர்த்தெடுக்க எல்லாவிதமான தியாகங்களையும் செய்தார்கள்.

### திராவிட இயக்கத்தால் பாதுகாக்கப்பட்ட தமிழ்நாடு!

இத்தனைப் பேரின் உழைப்பையும் தியாகத்தையும் நாம் வீணாக்கப்போகிறோமா அல்லது விதையாக்கப் போகிறோமா என்பது தான் நமக்கு முன் இருக்கும் கேள்வி. இந்தக் கேள்விக்கு பொறுப்பான விடை கூறும் நாள் தான் ஜனவரி 21. திராவிட இயக்கத்தால் பாதுகாக்கப்பட்ட தமிழ்நாட்டைக் காக்க - இந்திய ஒன்றியத்தை மீட்க நாம் உறுதி எடுக்கப் போகும் இடம் தான் சேலம் மாநாடு.

ஏதோ சிலருக்கு ஆட்சி அதிகாரத்தில் பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல நமது இயக்கம். பதவி நிலையானதும் அல்ல. ஆனால், நமது கழகம் நிலையானதாக இருக்க வேண்டும், நமது கொள்கை நிலையானதாக இருக்க வேண்டும். இந்த உணர்வு நமக்கு வேண்டும்.

பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் 'திராவிட இயக்க உணர்வு என்பது இயற்கை உணர்வு' என்று சொன்னார். ஆம், நமது இயக்க உணர்வு இயற்கையானது. எங்களுக்கு ஏன் பள்ளி, கல்லூரிகளில் இடமில்லை என்று கேட்கும் உணர்வு இயற்கை தானே. நாங்கள் ஏன் கோயிலுக்கு வெளியே நிற்க வேண்டும் என்று கேட்பது இயற்கை தானே. நாங்கள் ஏன் தோளில் துண்டு போடக்கூடாது என்று குரல்கொடுப்பது இயற்கை தானே, நீ எப்படி உயர்ந்த சாதி, நான் எப்படி தாழ்ந்த சாதி என்று கேட்பது இயற்கை தானே, எங்கள் தாய்மொழியாம் தமிழ் இருக்க, ஏன் இந்தியைக் கொண்டுவந்து திணிக்கிறீர்கள் என்று கேட்பது இயற்கை தானே, ஆண்களைப் போல பெண்களுக்கும் உரிமைகள் வேண்டும் என்று கோருவது இயற்கையானது தானே.

எனவே, நமது இயக்கம் காலத்தின் தேவை கருதி இயற்கையாக உருவான இயக்கம். இந்த இயற்கை உணர்வை, செயற்கையாக உருவாக்கப்பட்ட வர்ணாசிரம உணர்வையூட்டி அழிக்க முடியுமா என்ன? முடியாது, முடியவே முடியாது என்று முரசறைந்து கூறிடத்தான் சேலம் மாநாடு.

**அதிலும் குறிப்பாக, இந்தியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிற மிக முக்கியமான காலகட்டத்தில் இந்த மாநாடு நடக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர் காலத்தில் இருந்த எதிரிகளுக்கு கொஞ்சமேனும் நாணயம் இருந்தது. நமது கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சந்திக்கும் எதிரிகளுக்கு நாணயம் என்பது கிஞ்சிற்றும் கிடையாது.**

**அதன் காரணமாகத் தான், இப்போதெல்லாம் ஜனநாயகக் களத்தில் நேரடி அரசியல் மோதல் என்பது குறைந்து, சூழ்ச்சியாக விசாரணை அமைப்புகளைக் கொண்டு மோதுகிறார்கள். சமூக ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி தங்களுக்கு சாதகமான பொய்ச் செய்திகளைப் பரப்பி மோதுகிறார்கள்.**

**மதவெறியை, சாதிவெறியைத் தூண்டிவிட்டு மோதுகிறார்கள். சமூகநீதிக்கு ஆதரவானவர்களைப் போலவும் தமிழ்மொழியை நேசிப்பவர்கள் போலவும் நாடகமாடுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் கொள்கைகளை, கொள்ளைப்புற வாயிலாக நம் மக்கள் மீது திணிக்கிறார்கள். நேரடியாக எதையும் செய்யத் திராணியற்றவர்கள்.**

இந்தச் சவால்கள் யாவற்றையும் தகர்த்தெறிந்து தவிடுபொடியாக்கும் கடமை நம் முன்னே நிற்கிறது. அதை நாம் வெற்றிகரமாக செய்து முடிப்போம் என்கிற உறுதியை நமது கழகத் தலைவருக்கு கொடுக்கத் தான் நாம் சேலத்தில் கூடுகிறோம். இளைஞரணி என்பது நம் கழகத் தலைவர்கள் வகுக்கும் வியூகங்களை களத்தினில் செய்து முடிக்கும் படையாகும். நம் மீதான தாக்குதல்கள் பலமுனைகளில் இருந்து வரும். அவற்றையெல்லாம் முறியடித்து நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அத்தகையப் படையின் கட்டுப்பாட்டை நாம் சேலத்தில் காட்ட வேண்டும்.

### போர்க்கலை

சன் சூ (Sun Tzu) என்கிற பண்டையச் சீனாவின் படை வல்லுனர் எழுதியப் போர்க்கலை (The Art of War) என்னும் நூலில் ஒன்றைச் சொல்லுவார். "Victorious warriors win first and then go to war, while defeated warriors go to war first and then seek to win."

இதனை தமிழில் சொல்வதானால், "வெற்றிக்குரிய வீரர்கள் தம் வெற்றியை முன்பே எட்டிவிட்டு பின்னர் தான் போர்க்களம் புகுவார்கள். ஆனால், தோல்விக்குரிய வீரர்களோ போர்க்களம் புகுந்துவிட்டு பிறகு எப்படி வெற்றிபெறுவது என்று பார்ப்பார்கள்".

இதனை சற்று விளக்கமாக சொன்னால், ஒரு திறன்வாய்ந்த தளபதி போர்க்களத்துக்கு செல்லும் முன்பு திட்டமிடல், முன்தயாரிப்புகள், வியூகங்கள், எதிரியின் பலமறிதல், பலவீனமறிதல் என எல்லாவற்றையும் கணக்கிட்டு முறைப்படுத்திவிட்டு தான் தமது வீரர்களை களத்துக்கு அனுப்புவான். மாறாக, களத்தில் இறங்கியப் பின்னர் திட்டங்களை, வியூகங்களை வகுத்துக் கொண்டிருந்தால் தோல்வி உறுதி.

இந்த அளவுகோலின்படி பார்த்தால், நம் கழகத்தின் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நாம் சந்தித்த எல்லாத் தேர்தல் களங்களிலும் நம் கழகம் வெற்றிக்கொடியே நாட்டியுள்ளது.

நம் தலைவர் அவர்களின் முன்தயாரிப்பு, அவர்கள் அமைத்த வலுவானக் கூட்டணி, அவர் வகுத்த வியூகங்கள் தான் தமிழ்நாட்டில் நம் எதிரிகளை திணறடித்துக் கொண்டிருக்கிறது. இத்தகையச் சிறப்பு வாய்ந்த நம் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல் இப்போது இந்திய அளவில் தேவைப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலை இந்தியா கூட்டணி இந்தந்த வகைகளில் சந்தித்தால் தான் எதிரியை எளிதில் வீழ்த்த முடியும் என்று அதன் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் முழங்கியவர் நம் தலைவர் அவர்கள். இப்போது நடந்து முடிந்திருக்கிற 5 மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் நம் தலைவரின் கருத்துகளுக்கு மேலும் கவனத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

### அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சமயம்!

இந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சமயத்தில் தான் நாம் சேலத்தில் திரள இருக்கிறோம். இந்த மாநாட்டை ஏதோ கூட்டினோம் முடித்தோம் என்று செய்ய விரும்பவில்லை நமது தலைவர் அவர்கள். அவர் தான் திறன்மிக்க தளபதி ஆயிற்றே!

என்னை ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று இளைஞரணித் தோழர்களைச் சந்தித்து, மாநாட்டுக்கு திரண்டு வருவதற்கான தயாரிப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கச் சொன்னார். கடந்த பல மாதங்களாகவே நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, உங்களை எல்லாம் உங்கள் மாவட்டத்திலேயேச் சந்தித்துப் பேசினேன். உங்களுடைய எழுச்சியும் - உற்சாகமுமே மாநாட்டின் வெற்றியை உறுதிபடுத்தும் வகையில் அமைந்தது.

> “இந்தச் சவால்கள் யாவற்றையும் தகர்த்தெறிந்து தவிடுபொடியாக்கும் கடமை நம் முன்னே நிற்கிறது. அதை நாம் வெற்றிகரமாக செய்து முடிப்போம் என்கிற உறுதியை நமது கழகத் தலைவருக்கு கொடுக்கத் தான் நாம் சேலத்தில் கூடுகிறோம்.
>
> இளைஞரணி என்பது நம் கழகத் தலைவர்கள் வகுக்கும் வியூகங்களை களத்தினில் செய்து முடிக்கும் படையாகும். நம் மீதான தாக்குதல்கள் பலமுனைகளில் இருந்து வரும். அவற்றையெல்லாம் முறியடித்து நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அத்தகையப் படையின் கட்டுப்பாட்டை நாம் சேலத்தில் காட்ட வேண்டும்.”

அதன்பிறகு, நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர் - பெரியார் - அண்ணா - கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு-சிவப்பு உடையணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது. இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம்.

ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து, மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்தவண்ணம் உள்ளன.

இது தான், போர்க்களத்துக்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள்.

இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றிய அரசியலின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன.

என தருமை இளைஞரணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர்.

நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில்,

**"ஓர் இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் - அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் - பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரியமாற்றவும் இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவலாகும்" என்று சொன்னார்.**

அந்த கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலம் ஆத்தூரில் நமது மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்கள் மனதில் பதிய வைக்கவும், மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல்படி நடக்கவும் உறுதியேற்கத் தான் நம் இளைஞரணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் மாநாட்டுப் பந்தலில் என் கண்கள் தேடும்.

**தமிழ்நாட்டை மட்டுமல்ல - ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க,**

**தி.மு.கழக இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கு அலைகடலென திரண்டு வருக - வெற்றியைத் தருக !**



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட திண்டல் சக்திநகர் நியாயவிலை கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார், நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் பானுமதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## டெல்லியில் தரையிறங்காத 8 விமானங்கள்!

புதுடெல்லி,ஜன.15-

டெல்லியில் நிலவிவருக் மோசமான வானிலையால் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. கடுமையான பனியால் பார்க்கும் திறன் குறைவாகி யிருப்பதால் விமானங்களை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

டெல்லியின் மோசமான வானிலையால் விமானங்கள் தரையிறக்கப்பட முடியாமல், வேறு இடங்களுக்கு வழி மாற்றப்படுகின்றன.

7 விமானங்கள் ஜெய்ப்பூருக்கும், ஒரு விமானம் மும்பைக்கும் வழி மாற்றியனுப்பப்பட்டு அங்கு பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளன.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி தலைமையில், நந்தனம் கி.மதி முன்னிலையில், மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகம் சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரத்தில் நடைபெற்றது. இதில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் – மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கழக தோழர்களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கினர். இவ்விழாவில் கே.ஏழுமலை எம்.சி. எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், ஏ.தாஸ், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, விமலாகிருஷ்ண மூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி. வட்ட செயலாளர்கள் துரைபார்த்திபன், கீதாமுரளி எம்.சி., மா.பா.அன்பு உள்ளிட்டோர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில்

## விவசாயிகளுக்கு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, ஜன. 15 -

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், கீழாத்தூர் கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.39.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.01.2024 அன்று திறந்து வைத்து, விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் வேளாண்மை உழவர் நலத்துறைக்காக தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கான



திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் திருவரங்குளம் வட்டாரம், கீழாத்தூர் கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், ரூ.39.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, 110 மெ.டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

இம்மையம் 105.41 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டு 7 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 14 கிராமங்களில் உள்ள 3,307 விவசாய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாமிகளின் 1771.50 ஹெக்டேர் விளைநிலங்களில் பயிர் செய்யப்படவுள்ள நெல், நிலக்கடலை, உளுந்து, மக்காச்சோளம் மற்றும் தென்னை உள்ளிட்ட விளைப்பொருட்களை சேமித்து வைத்து விவ சாயிகள் பயன்பெறலாம்.

எனவே இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இம்மையத்தினை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தாங்கள் விளைவித்த விளைப் பொருட்களை சேமித்து வைத்து, விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் சமயத்தில் விற்பனை செய்து பயன்பெறலாம் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் வேளாண்மை பொறியியல் துறை சார்பில், தனிநபர் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், பண்ணை குட்டை அமைத்தல், நெல் நடவு இயந்திரம் மற்றும் வைக்கோல் கட்டும் இயந்திரங்கள் உள்ளிட்டவைகளை 7 பயனாளிகளுக்கு ரூ.21,29,000 மதிப்பிலான பல்வேறு வேளாண் உபகரணங்களை 11.01.2024 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் த வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஆர்.வி.செல்வம், மு.கருணாகரன், கே.வி.சுப்பையா, கே.சி.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

## சைதை கிழக்குப் பகுதி அலுவலகத்தில் பொங்கல் விழா!

### பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில்

சென்னை, ஜன. 15

சைதை கிழக்குப் பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ் புத்தாண்டு தை பொங்கல் தமிழர் திருநாளை முன்னிட்டு இன்று (15.01.2024 திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு சென்னை வேளச்சேரி நேரு நகரில் அமைந்துள்ள சைதை கிழக்கு பகுதி திமுக அலுவலகத்தில் பகுதி செயலாளர் 13வது மண்டல தலைவர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் தை பொங்கல் விழா மிக சிறப்பாக நடைபெற உள்ளது பொங்கல் விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர்மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு அனைவருக்கும் சர்க்கரை பொங்கல் வழங்கி வாழ்த்துகிறார்கள்.

எனவே சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் அனைவரும் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சைதை கிழக்கு பகுதி செயலாளம் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்

## ஜல்லிக்கட்டு: ஆன்லைன் டோக்கன் பதிவிறக்கம் தொடங்கியது!

மதுரை, ஜன.15-

ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் வீரர், காளைகளுக்கான டோக்கன் பதிவிறக்கம் தற்போது தொடங்கி உள்ளது. தமிழகத்தில் மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்த போட்டிகளாக கருதப்படுகின்றன. புகழ்பெற்ற இந்த ஜல்லிக்கட்டு போட்டிகளில் மதுரை மட்டுமில்லாது தமிழகம் முழுவதும் உள்ள சிறந்த காளைகள் பங்கேற்கும்.

இதில் அவனியாபுரத்தில் நாளையும்(15ம் தேதி), பாலமேட்டில் 16ம் தேதியும் அலங்காநல்லூரில் 17ம் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த நிலையில், மதுரையில் நாளை நடைபெறவுள்ள அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் வீரர், காளைகளுக்கான டோக்கன் பதிவிறக்கம் தற்போது தொடங்கி உள்ளது. madurai.nic.in அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் டோக்கனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்; டோக்கனில் அனுமதி சீட்டு எண், ஆதார் எண் உள்ளிட்டவற்றுடன் QR Code இணைக்கப்பட்டுள்ளது



எக்ஸ்னோரா அமைப்பின் நிறுவனத் தலைவர் எம்.பி. நிர்மலின் வழிகாட்டுதல்படி, 'எக்ஸ்னோரா இண்டர்நேசனல் பவுண்டேசன்' சுற்றுச் சூழல் மற்றும் சமூக சேவை அமைப்பின், சென்னை தலைமையக கௌரவ மக்கள் தொடர்பு அலுவலராக, தன்னார்வலரும், சமூக சேவகருமான அரிமா டாக்டர் ஆவின் கி.கோபிநாத் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஆணையை கோபிநாத்திடம், எக்ஸ்னோரா இண்டர்நேசனல் அமைப்பின் தலைவர் எஸ். செந்தூர்பாரி வழங்கினார். உடன் எக்ஸ்னோரா அமைப்பின் பொருளாளர் வி.சுப்பிரமணி, அறங்காவலர் காசி மோகனசுந்தரம், நிர்வாக அலுவலர் முனவர்தீன் உள்ளிட்டோர்.

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

## எழும்பூர் தொகுதியில் பொங்கல் விழா: விளையாட்டுப் போட்டிகள், கோலப் போட்டி!

### பரிசுக் கோப்பைகள், விளையாட்டு வீரர்களுக்கான உடைகள், உபகரணங்கள் வழங்கப்பட்டன!

சென்னை, ஜன.15-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் கால்பந்தாட்டப் போட்டி, கேரம் போட்டி, கோலப் போட்டி ஆகியவை போகிப் பண்டிகையன்று நடைபெற்றன.

எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, கே.பி.பார்கில் அமைந்துள்ள செயற்கை புல்தரை கால்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 16 அணிகள் பங்கேற்ற கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

மாவட்டப் பிரதிநிதியும், முன்னாள் வட்டச் செயலாளருமான கமலகண்ணன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், வழக்கறிஞர் தர்மதுரை ஆகியோர் இக்கால்பந்தாட்டப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினர்.

எழும்பூர் தொகுதி, 108 வது வார்டு, சேத்துப்பட்டு, அவ்வைபுரத்தில் கேரம் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், 108 வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன் ஆகியோர் இக்கேரம் போட்டியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, சூளை, காட்டூர் நல்லமுத்து தெருவில் கோலப் போட்டி நடைபெற்றது.

மாவட்டப் பிரதிநிதி கமலகண்ணன், பாக முகவர் கவிதா ஆகியோர் இக்கோலப் போட்டியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

இவ்விளையாட்டுப் போட்டிகளிலும், கோலப் போட்டியிலும் வெற்றி பெற்ற அணிகள், போட்டியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி கே.பி. பார்கில் நடைபெற்றது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், வெற்றி பெற்ற அணிகள், போட்டியாளர்கள், சிறந்த கோல் கீப்பர் (Best Goal Keeper), சிறந்த கோலர் (Best Goaler) ஆகியோருக்கு கோப்பைகள், பரிசுப் பொருட்களை வழங்கியதோடு, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு 40,000 ரூபாய் மதிப்பிலான விளையாட்டு வீரர்களுக்கான உடைகள் மற்றும் 50,000 ரூபாய் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பிரதிநிதி கமலகண்ணன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜய குமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, அவைத் தலைவர் விசுவநாதன், பகுதிப் பிரதிநிதிகள் நந்தகுமார், ஏ.யு.மணிவண்ணன்;

எழும்பூர் வடக்குப் பகுதி ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் இ.பி. ரமேஷ், வட்டச் செயற்குழு உறுப்பினர் பி.விஜய லெட்சுமி, பாக முகவர் வழக்கறிஞர் சூர்யா, சூளை நேரு, பி.கே.ஆர்.வினோத், 58 (அ) வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல். சுகுமாரன், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், எழும்பூர் ரமேஷ், வழக்கறிஞர் நேரு பிரபா, பிரம்மதேவன், கி.புஷ்பராஜ், அசினா பேகம், கலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் கழகச் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் கால்பந்தாட்டப் போட்டி, கேரம் போட்டி, கோலப் போட்டி ஆகியவை நடைபெற்றன. எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், வெற்றி பெற்ற அணிகள், போட்டியாளர்கள், சிறந்த கோல் கீப்பர் (Best Goal Keeper), சிறந்த கோலர் (Best Goaler) ஆகியோருக்கு கோப்பைகள், பரிசுப் பொருட்களை வழங்கியதோடு, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு 40,000 ரூபாய் மதிப்பிலான விளையாட்டு வீரர்களுக்கான உடைகள் மற்றும் 50,000 ரூபாய் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பிரதிநிதி கமலகண்ணன் தலைமை தாங்கினார்.

### எஸ்.ஆர்.செந்தில் தலைமையில்

## 172 அ வட்டக் கழகத்தினருக்கு பொங்கல் பரிசு!

### மு.மகேஷ்குமார் வழங்கினார்

சென்னை, ஜன. 15 -

சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் தமிழர் திருநாளை முன்னிட்டு நேற்று கழக நிர்வாகிகள் - முன்னோடிகளுக்குபேண்ட் ஷர்ட், சேலைகள், கரும்பு ஆகியவற்றைவட்டக்கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் தலைமையில் துணை மேயர் மு. மகேஷ் குமார் வழங்கினார்.

தமிழர் திருநாள் -தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மாவட்டக்கழகச்செயலாளரும்அமைச்சருமானமா.சுப்பிரமணியன்ஆலோசனைப் படி, பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் வழிகாட்டுதலின்படியும், சைதை கிழக்குப்பகுதி172அவட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் ஏற்பாட்டில் வட்டக் கழக நிர்வாகிகள், முன்னோடிகளுக்கு புத்தாடைகளை, கரும்பு தலைமைச் செயற்குழு உறுப்பினர் துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதிகள் ஜி. செல்வராஜ், வி. ரமேஷ்குமார், வட்ட அவைத் தலைவர்தா.கோ.வெங்கடேசன், பகுதி பிரதிநிதிகள் ஏ. சக்திவேல், எம். நாராயணமூர்த்தி, ஆர். சீனிவாசன், எஸ்.அசோக்குமார், கே.கே. மோகன், மாவட்ட துணை அமைப்பாளர்ஜே.ஜெயராமன், எஸ். சுரேஷ், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. ஜெயவேல், வட்ட செயற்குழு உறுப்பினர்கள்ரவீந்தர், கே. சுகுமார், காமராஜபுரம் ராமர், சிங்கமுத்து, வழக்கறிஞர் குமரன், லிங்கப்பன், கோடீஸ்வரன், இளைஞர் அணி கழகத் தோழர்கள் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி நடராசன் (தாளமுத்து)

### சனவரி 15 (1939)



சென்னை பண்ணைக்கார ஆண்டியப்பன் தெருவைச் சேர்ந்த நடராசன், தன் பெற்றோரிடம் "நான் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட விரும்புகிறேன். தமிழர்களின் பின் சந்ததியர்க்காகச் சிறை செல்ல நான் பின்னடையப் போவதில்லை" என்றபோது, முழுமனதோடு தன் ஒரே மகனுக்கு ஒப்புதல் அளித்தார்கள் பெற்றோர்.

5.12.1938 அன்று மறியல் களம் சென்று இந்தி எதிர்ப்புப் போரில் பங்குபெற்று ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றார்.

சிறையில் காய்ச்சல் ஏற்பட்டு நிலைமை கவலைக்கிடமான போதும், சிறைக் காவலர்கள் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியேறும்படி எவ்வளவோ மன்றாடினர், வற்புறுத்தினர். ஆனாலும் "செத்தாலும் சிறையில் சாவேனே ஒழிய, மன்னிப்பு என்ற பேச்சே கிடையாது" எனத் தெரிவித்து சிறையிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.

சிறைச் சாலையில் இறந்துபோன நடராசனும், தாளமுத்துவும்தான் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலிகள்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் 2000 பேருக்கு பொங்கல் திருநாளையொட்டி புத்தாடைகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதி செயலாளர் ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

மணலி – எண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும்

# வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன.15-

தமிழ்நாட்டில், வட சென்னை பகுதியின் வளர்ச்சிக்கென "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" தொடர்பான அறிவிப்பு, 2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டு, தற்போது விரிவான செயல் திட்டம் தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மணலிஎண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

அதனடிப்படையில், விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் வரை, கீழ்க்கண்ட திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது:

மாசு சுமை, உமிழ்வு விதிமுறைகள், கழிவுகள் மற்றும் பறக்கும் சாம்பல் வெளியேற்றம் மற்றும் இப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் நீரின் தரத்தை கண்காணிப்பதற்காக, சிறப்பாக ஒரு மாசு கண்காணிப்பு மற்றும் கட்டளை மையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மிகவும் நவீன தானியங்கி அமைப்புகள் மூலம் மாசுக் கட்டுப்பாட்டைக் கண்காணிக்க இந்த மையம் தகுதிவாய்ந்த ஊழியர்களைக் கொண்டிருக்கும். இந்த மையத்திற்கு உதவியாக மணலி மற்றும் எண்ணூர் பகுதியில் பிரத்யேகமாக இரண்டு பறக்கும் படைகள் நிறுத்தப்படும்.

மாசு கண்காணிப்பு மற்றும் கட்டளை மையம் ஒரு அவசரகால நடவடிக்கைக் குழுவை அமைக்கும், இது வழக்கமான மாதிரி பயிற்சிகள், சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சுகாதார முகாம்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதற்கு பொறுப்பாகும்.

இப்பகுதியில் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக மணலிஎண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு நிறுவனம் (ManaliEnnore Restoration and Rejuvenation CompanyMERRC) என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தை அரசு ஏற்படுத்தும். மணலிஎண்ணூர் பகுதியில் பெருமளவிலான நகர்ப்புற பசுமையாக்குதல், நீர்நிலைகளைப் புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கை, சதுப்புநில மறுசீரமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை மேற்கொள்ள ஒரு சிறப்பு நிதி உருவாக்கப்படும். இந்த சிறப்பு நிதிக்கான ஆதாரம், அரசின் பல்வேறு திட்டங்கள் மூலமும், தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியின் மூலமும் உருவாக்கப்படும்.

இப்பகுதியில் உள்ள அனைத்து சிவப்பு வகை தொழிற்சாலைகளின் பாதுகாப்பு தணிக்கையை தொழில் பாதுகாப்பு இயக்குநரகம், நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளும்.

திருவொற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை மற்றும் 100 படுக்கைகள் கொண்ட நகர்ப்புற சமுதாய நல மையம் ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. உடனடி மற்றும் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, கத்திவாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கைகளுடன் தரம் உயர்த்தப்படும்.

இயந்திரமயமாக்கப்பட்ட துப்புரவுப் பணி, நீர் தெளிப்பான்கள் மூலம் தூசி மாசுபாட்டைக் குறைப்பதற்கான விரிவான திட்டத்தை உள்ளடக்கிய திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும்.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் இருந்து சாம்பல் அணைக்கட்டுக்கு ஈரமான சாம்பலை எடுத்துச் செல்லும் குழாய்கள் புதுப்பிக்கப்படும்.

மீன்வளத் துறை, உள்ளூர் மீனவ சமூகங்களை ஈடுபடுத்தி நிபுணத்துவ முகமைகளின் உதவியுடன் இப்பகுதியில் நிலையான மீன்பிடிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எண்ணூர் கழிமுகத்தில் உள்ள சதுப்பு நிலங்களை புனரமைக்கும் பணிகளை வனத்துறை தொடங்கியுள்ளது. இப்பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கவும், புலம்பெயர்ந்த பறவைகளுக்கு உதவும் வகையில் இப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை மீட்டெடுக்கவும் இத்துறை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் எண்ணூர் மணலி பகுதிகளில் உள்ள தொழில்சார் திறன் தேவைகளை கண்டறிந்து இளைஞர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப தலை சிறந்த நிறுவனங்களுடன் இணைந்து பயண ஊக்கத் தொகையுடன் கூடிய கட்டணமில்லா திறன் பயிற்சி வழங்கப்படும்.

அம்மோனியா வாயு கசிவு குறித்து விசாரிக்கபடும் விசாரணையில், விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

அமோனியா வாயு கசிவு குறித்து ஏற்கெனவே ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அக்குழுவின் இறுதி அறிக்கை பெறப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டு மக்களின் நலனையும் நல்வாழ்வையும் இரு கண்களாகக் கருதி, கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை முழுவீச்சில் செயல்படுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



சென்னை தென்மேற்கு மாவட்டம் இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தலைமையில் பி.கே.மஹாலில் இலக்கிய அணி பொங்கல் விழா 2024 நேற்று முன்தினம் (13.01.2024) நடைபெற்றது. தை பொங்கல், தமிழ் புத்தாண்டை ஒட்டி இலக்கிய அணி நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கப்பட்டது. மேலும் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் மாவட்ட இலக்கிய அணி சார்பில் சென்ற ஆண்டிற்கான தமிழ் செம்மல் விருது 2023 தமிழ் ஆசிரியர் ஹரி ஹரனுக்கு மாவட்ட செயலாளர் மயிலை சட்ட மான்ற உறுப்பினர் மயிலை த. வேலு வழங்கினார். உடன் தியாகராயர் நகர் சட்ட மன்ற உறுப்பினர் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ. கருணாநிதி, மயிலை கிழக்கு பகுதிச் செயாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., 124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா. அன்பு, 124 வட்ட செயலாளர் தாஸ், மற்றும் இலக்கிய அணி தலைவர் ச. தேவ ராசு, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி ,துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரத்தில் சமத்துவ பொங்கல் விழா - 1000 குடும்பங்களுக்கு நல உதவிகள்!

## கே.கருணாகரன் தலைமையில் – நா.சந்திரபாபு வழங்கினார்!

சென்னை, ஜன.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, சமத்துவ பொங்கல் விழா, 17 வது வட்டம் கொசப்பூர் டாக்டர் அம்பேத்கர் நகரில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற இப் பொங்கல் விழாவில், பொது மக்களும், தூய்மை பணியாளர்களும், தாய்மார்களும், அங்காள பரமேஸ்வரி கோயில் எதிரே புது பானையில் பச்சரிசி வெல்லம், கலந்து பொங்கலிட்டனர். பொங்கலோ பொங்கல் என்று குலவை சத்தத்துடன் சமத்துவ பொங்கலை கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதன் பிறகு சர்க்கரைப் பொங்கல் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது.

பிறகு டாக்டர் அம்பேத்கர் நகர் மற்றும் 17வது வார்டுக்கு உட்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு கரும்பு ,காலண்டர், அரிசி, வெல்லம் புடவை, ஆகியவற்றை மாதவரம் தொகுதி தலைமைக் கழக பார்வையாளர் டாக்டர் நா. சந்திரபாபு வழங்கினார்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம் .என். அஜய் தென்னவன், எஸ். சிவகுமார்,கே. சண்முக பிரியன், சி. மூர்த்தி, எஸ். பாலாஜி, இ.சுதர்சன், வி. பார்த்தசாரதி, 16 வது வட்டம் கடப்பாக்கம் மகேஷ் குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் அணி நிர்வாகி பொற்கொடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் குழந்தைகளும் பெரியவர்களும் பொங்கல் பண்டிகையை பாட்டுப்பாடியும் நடனமாடியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

மேலும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் அரியலூர் வினோத், ராஜ்குமார், நாகராஜ், பூபாலன், ஜான்சன், ஜோசப் என்கின்ற விஜயன், வடபெரும்பாக்கம் என் .நாகராஜன், டாக்டர் மைக்கேல், பி. செந்தில், எம். கோவிந்தன், ஜி. முனிவேல்,செல்வம், கமலநாதன், டாக்டர் அம்பேத்கர் நகர் செல்வம், மணிகண்டன், பாரதி, கொசப்பூர் விஜயன், முனுசாமி, தினகரன், சுமிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.


கலைஞர் 100
1924 - 2023

# அய்யன் திருவள்ளுவர் திருநாள்

"ஈரடியில் பொய்யாமொழி தந்த
அய்யன் திருவள்ளுவர்
இனமானத் தமிழ்நாட்டின் முகவரி"
– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாடு அரசின் சார்பில்
**அய்யன் திருவள்ளுவர்**
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
**மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,**
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் வணக்க மரியாதை செலுத்துவார்கள்.



**நாள் : 16.1.2024, செவ்வாய்க்கிழமை, நேரம் : காலை 10.00 மணி**
**இடம்: வள்ளுவர் கோட்டம், சென்னை**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ./ 37 /வரைகலை/2024

இயக்குநர்,
செய்தி - மக்கள் தொடர்புத்துறை


தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி – திருவொற்றியூர்

# 8-வது வட்டத்தில் 500 பேருக்கு நல உதவிகள்- மருத்துவ முகாம்!

## இரா.முருகேசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன.15-

தமிழர் திருநாளாம் தை பொங்கல் நாளையொட்டி சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8-வது வட்டக் கழகத்தில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மற்றும் மாவட்ட கழகப் பிரதிநிதி ஜெ.பி.சந்தான கிருஷ்ணன் ஏற்பாட்டில் பகுதி வாழ் மக்கள் 500 பேருக்கு அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும் பகுதி மக்களுக்கு சுகம் மருத்துவமனை மருத்துவர்கள் மூலமாக இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினர், பகுதி கழகத்தின் முன்னாள் அவை தலைவர் எஸ். முத்தையா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் வட்ட கழகச் செயலாளர், மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் ஏகா. கார்த்திகேயன், கே.கார்த்திகேயன், மாவட்ட சுற்றுச் சூழல் அணியின் துணை அமைப்பாளர் பால உமாபதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஜி.ஆர்.மணிவண்ணன், எம்.ஜெ.பக்தவச்சலம், எம்.எஸ்.பாண்டியன், இளைஞர் அணியைச் சேர்ந்த எம்.கார்த்திக், வி.ஆர். சீனிவாசன், விஜயராகவன், ரா.கணேசன், கென்பட் முனுசாமி, பரணி குமார், கே. ராமலிங்கம், பி.பி.ஜோதி, சம்பத், மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் வதட்டூர் கிராமத்தில் தமிழர் திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் விழா ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் கிளை செயலாளர்கள் பூபதி, புருஷோத்தமன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு சமத்துவ பொங்கலைத் துவக்கி வைத்து 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், கி.தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், சௌந்தர்ராஜன், ஜெய்சங்கர், சரவணன், வேலு, சிற்றரசு, ஏழுமலை, நாகராஜ், உள்பட பலர் உள்ளனர்.


கலைஞர் 100
1924 - 2023
நாள்
17.01.2024
புதன்கிழமை
இடம் : மதுரை.
தமிழர் திருநாளை முன்னிட்டு
தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான
அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை துவக்கி வைக்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வணங்கி வரவேற்கும்
மதுரை மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57,60(அ) வட்ட திமுக சார்பில் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்தது. இதில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கழக இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர், மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ஆசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 160வது வட்ட சார்பில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பண்டிகையை யொட்டி புத்தாடையை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், வட்டச் செயலாளர் முரளிகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் பிருந்தா ஸ்ரீ ஆகியோர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டத்தில்

# மாவட்ட செசன்ஸ் நீதிமன்றம் - நடுவர் மன்றங்கள் திறப்பு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார்!

தென்காசி, ஜன.15-

தென்காசி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட செசன்ஸ் நீதிமன்றம் மற்றும் மாவட்ட தலைமைநீதித்துறைநடுவர் மன்றங்கள் திறப்பு விழா நிகழ்வு குற்றாலம் காசிமேஜர்புரம் ஸ்ரீ முருகன் மகாலில் சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்கா பூர்வாலாதலைமையில்சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, உயர்நீதிமன்றநீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஜி.இளங்கோவன் ஆகியோர்முன்னிலையில்நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டத் துறைஅமைச்சர்எஸ்.ரகுபதி பேசியதாவது.

சமூக நீதி, மாநில சுயாட்சி, சுயமரியாதை, பொருளாதார சமநிலை, வேளாண்வளர்ச்சி,தொழில் வளர்ச்சி, சமூக மற்றும் மத நல்லிணக்கணம்சமூக,அரசியல், பொருளாதார நீதி

ஆகியவற்றை தமிழ் நாட்டுமக்களுக்குசிறப்பாக கிடைக்கச்செய்யவேண்டும் என்பதே "திராவிடமாடல்" அரசின் குறிக்கோளாகும். பேப்பர்இல்லாதநிர்வாகம், திறமையானவிரைவானநீதி வழங்குதல்,மின்னணு அலுவலகம்,மின்னணுநிர்வாகம் போன்ற தலைமை நீதிபதி எண்ணங்களுக்கு அரசு ஒத்துழைப்புவழங்கிவருகிறது. நிலம், கட்டிடம்,அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கு அரசு முன்னுரிமை வழங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் நீதித்துறைக்கும்,நீதிபதிகளுக்கும்உரியமரியாதையை எப்போதும்தந்துவருகிறார். நீதிமன்றநிகழ்ச்சியில்முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் போதெல்லாம் இரு கோரிக்கைகளை வலியுறுத்திவருகிறார்.ஒன்றுஉச்சநீதிமன்றத்தின் கிளை சென்னையில் அமைக்க வேண்டும்.மற்றொன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்பதாகும். வழக்கு மொழியாக கொண்டு வருவதற்கு முன்னால்அனைத்துசட்டசொற்களையும் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கவேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. சட்ட மொழிஆணையம்பல்வேறு சட்ட சொற்களை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 சட்ட புத்தகங்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது. தென்காசியில் துவங்கப்பட்டுள்ள புதிய நீதி மன்றங்கள் வாதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும் மிகவும்உதவிகரமாகஇருக்கும்.

இவ்வாறு அமைச்சர் ரகுபதி பேசினார்.

நிகழ்வில்சென்னைஉயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்கா பூர் வாலா புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட செசன்ஸ் நீதிமன்றம், மாவட்டதலைமை நீதிமன்றம் நடுவர் மன்றங்களை துவக்கி வைத்து பேசியதாவது.

தென்காசியில் புதிதாக துவங்கப்பட்டுள்ளஇருநீதிமன்றங்களும் வாதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும்,பொது

மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகஇருக்கும்.வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். இதுபோல வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக தமிழ்நாட்டிற்கு கூடுதலாக 1350 நீதிகளை நியமிக்க வேண்டும்.சட்டஅமைச்சர் முன்பாக கோரிக்கையை வெளிப்படுத்துகிறோம். அதிக அளவிலான வழக்குகள் நிலுவையில் இருப்பதால் நீதிபதிகள் கவலையுடன் இதை தெரிவிக்கின்றனர். நிலுவையில் உள்ள வழக்குகளால் அல்லது தாமதங்களால் வாதிகள் பாதிக்கப்படுகின்றனர் நீதி மன்றத்திற்கு வராமல் கூட போகலாம்.சமூகத்தில்ஒடுக்கப்பட்ட,நசுக்கப்பட்டமக்களுக்குநீதிஎவ்வாறுகிடைக்கும். நீதிபதிகளின் எண்ணிக்கைஅதிகரிப்பதன் மூலம் வழக்குகளை விரைந்துதீர்க்க முடியும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் 1,11,000,ம் வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளது.மதுரை அமர்வில் 65,000,ம் வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளது.இவ்வளவு அதிகமான வழக்குகளை தீர்த்து வைத்து நமது மாநிலம் மட்டுமே என்பதை பெருமையாக தெரிவித்துக் கொள்கிறேன்.வழக்குகளை தீர்க்க வாதிடுவது மட்டுமேதீர்வாகாது.மாற்று வழிகளை நாம் கண்டறியவேண்டும்.சமரச தீர்வு உள்ளிட்டவற்றை நாட வேண்டும்.

நீதி மன்றங்கள் வெறும் செங்கல்களால் ஆனது அல்ல. பாதிக்கபட்டவர்களின்கடைசிநம்பிக்கையும், நீதியின் அடையாளமுமாக உள்ளது. வழக்கறிஞர்களும்,நீதிபதிகளும் அந்த நம்பிக்கையின் நீட்சியாக உள்ளனர். நீதி மன்றங்களுக்குஅடிப்படை கட்டமைப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும்.

இவ்வாறுசென்னைஉயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்கா பூர்வாலா பேசினார்.

முன்னதாக நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார்,இளங்கோவன், மாவட்ட ஆட்சியர் ரவிச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுரேஷ்குமார்

வழக்கறிஞர் கனகசபாபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசிதெற்குமாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்நாடாளுமன்றஉறுப்பினர் தனுஷ் எம் குமார்,மாவட்டமுதன்மை நீதிபதிகள்சந்திரா(நெல்லை) கருணாநிதி (தென்காசி) அரசு வழக்கறிஞர்கள் சுப்பிரமணியன், வேலுச்சாமி, இருதயராஜ்,முருகன்,முத்துக்குமாரசாமி, மாரிகுட்டி, திருமலை குமார்,ஜேக்கப், தென்காசி பார் அசோசியேஷன் தலைவர் செல்லத்துரை,செயலாளர் மாரியப்பன்,அட்வகேட் அசோசியேஷன்தலைவர்பாண்டியராஜன், செயலாளர் புகழேந்தி உள்பட வழக்கறிஞர்கள்பலர்கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நீதித்துறை நடுவர் மனோஜ் குமார் நன்றியுரையாற்றினார்.

### திருப்பத்தூர் நகரக் கழக அவைத் தலைவர்

# டி.இ.ஸ்ரீதர் துணைவியார் டி.லலிதா லட்சுமி மறைவு!

## அமைச்சர் ஆர்.காந்தி – தேவராஜி எம்.எல்.ஏ. – நல்லதம்பி எம்.எல்.ஏ. அஞ்சலி!

திருப்பத்தூர், ஜன.15-

திருப்பத்தூர்மாவட்டம், திருப்பத்தூர் டவுன் சாய் பாபா காலனி (ஆசிரியர் நகர்)யில் வசிக்கும் நகரக் கழக அவைத் தலைவர் டி.இ.ஸ்ரீதரின்துணைவியார் - திருமதி டி.லலிதா லட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024 - சனிக்கிழமை) இரவு 11.35 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



தகவல்அறிந்துஅமைச்சர் ஆர்.காந்தி,தேவராஜ்.எம்.எல்.ஏ., நல்லதம்பி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கு.ராஜமாணிக்கம், சாமுவேல் செல்லப்பாண்டியன், ஆம்பூர்நகரசெயலாளர்எம்.ஆர். ஆறுமுகம்,மாதனூர்கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.ச.சுரேஷ்குமார், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், பொதுக்குழுஉறுப்பினர்கள்சு.அரசு, எம்.ஏ.ஆர்.சபீர்அகமது மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

நகரக் கழகச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு டி.எஸ். பிருந்தா என்ற மகளும், டி.எஸ். எத்திராஜ் என்ற மகனும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம்நேற்று(14.1.2024- ஞாயிற்றுக் கிழமை) மாலை 5 மணியளவில் அவரது இல்லத்திலிருந்துபுறப்பட்டுஅங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி சார்பில் பகுதி செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவருமான ஏ. வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் பத்தாயிரம் குடும்பங்களுக்கு பொங்கல் தொகுப்பு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ, மிசா. ப. மதிவாணன், உதயா ராஜேந்திரன், வ.முத்துசாமி, டி.கரிகால சோழன், மு. செல்வம், சாலை டி.கணேசன், ஆர்.டி.ரமேஷ் குமார், வி.ஜி. தினகரன், துர்கா கோதண்டம், எம்.எஸ்.நாகலிங்கம், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஸ்டாலின், பா.செல்வராஜ், என் . விஜயரங்கன், ஏ. ஞானமூர்த்தி, சஞ்சீவி ஸ்ரீதர். மற்றும் கழகத் தோழர்களும், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி ஆகிய அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகிறார் !

# 78 வது வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா ! அறுசுவை உணவு!

## வட்டச் செயலாளர் சு.மனோகர் வேண்டுகோள்!

சென்னை ஜன.15

எழும்பூர் வடக்கு பகுதி, 78வது வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெறுகிறது. இதுகுறித்து வட்டச் செயலாளர் சு.மனோகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்டத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இன்று (15.01.2024 திங்கக்கிழமை) காலை 10 மணி அளவில் இந்து சமய அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, தானா தெருவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, கரும்பு, இனிப்பு மற்றும் மதிய அறுசுவைஉணவு வழங்குகிறார்.

இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் சொ.வேலு, மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத், க.நந்தீஸ்வரன் மற்றும் பொது குழு உறுப்பினர் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி,மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறபிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் சு.மனோகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் அதன் மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தை பொங்கல் திருநாளையொட்டி 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பொங்கல் சிறப்பு பரிசுகளை வழங்கினார். சங்க பொதுச்செயலாளர் எஸ்.சரவணகுமார், மாநில பொருளாளர் டாக்டர எஸ்.நசீம், பிஆர்ஓ பா.சக்திவேல், சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி சரிதா தங்கம், தி.நகர் பகுதி மகளிர் நிர்வாகிகள் பெ.எலிசபெத், பூங்கொடிகுமரன், லெட்சுமி தேவராஜ், லெட்சுமிகமலகண்ணன்மற்றும் சங்க நிர்வாகிகள் க.இளஙகோவன், கி.பத்மநாபன், பா.வெங்கடேசன், ஆர்.சீனிவாசன், வி.தர்மலிங்கம்,பி.மீகா, குமாரி, பச்சையம்மாள் ஆகியோர் உடன் உள்ளனர்.

மலைக்கோட்டை மாவீரர் - திராவிட இயக்க தீரர்
நினைவில் வாழும் அ.மலர்மன்னன் Ex., M.L.A. அவர்களின்
87-வது பிறந்தநாள் விழா
நாள் : 16 - 1 - 2024, செவ்வாய்கிழமை



தங்களின் திராவிட இயக்க உணர்வுகளே எங்களின் உரம்!
தங்களின் ஆசிகளே எங்கள் வரம்!
தங்களின் 87-வது பிறந்தநாளில் தங்களை பெருமகிழ்வுடன் வணங்குகின்றோம்!
ராணி மலர்மன்னன் ◉ அனிதா மலர்மன்னன் ◉ ஷெரில் பிரியா சித்தார்த்தன்
சித்தார்த்தன் சந்திரசேகரன் ◉ நிவின் மித்தரன்



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேற்று (14.1.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள பொங்கல் சிறப்பு சந்தையை நேரில் சென்று பார்வையிட்டு, கரும்பு, மஞ்சள் மற்றும் இஞ்சிக் கொத்து உள்ளிட்ட பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் விவசாயிகளிடமும், அங்கு தூய்மைப் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, கோயம்பேடு அங்காடி முதன்மை நிர்வாக அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி , செயற்பொறியாளர் ராஜன் பாபு , உதவி செயற்பொறியாளர் திருமதி.அமுதா மற்றும் சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா ஜனவரி 14.1.2024 முதல் 16.1.2024 வரை சிறப்பாக கொண்டாடப்படுவதையொட்டி, 13.01,2024 அன்று தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல முதன்மை உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் சாட்டர்ஜி முன்னிலையில் வைகை தமிழ்நாடு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சி மற்றும் தமிழ் உணவு அரங்கங்களை திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### வரும் 17ஆம் தேதி உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர்

# ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவங்கி வைக்கிறார்!

## எழுச்சிமிகு வரவேற்புக்கு ஏற்பாடு! அமைச்சர் பி.மூர்த்தி பணிகளை நேரில் ஆய்வு!

மதுரை, ஜன. 15 -

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலகப்புகழ் வாய்ந்த ஜல்லிக்கட்டாகும், வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ள சிறப்பு மிக்க இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறந்த காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு கார், தங்கக்காசு உள்ளிட்ட பல்வேறு பரிசு பொருட்களை வழங்க உள்ளார்.

சிறப்பு மிக்க இந்த விளையாட்டு போட்டியான ஜல்லிக்கட்டு முன்னேற்பாடுகளை நாள்தோறும் நேரில் சென்று மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி நேரில் ஆய்வு செய்து வருகின்றார்.

மேலும் நிகழ்ச்சிக்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ் கலாச்சார கலைகளுடன் முரசு கொட்டும் முழங்க இரு வண்ணக் கொடி ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கவும் ஏற்பாடும் நடைபெற்று வருகிறது,

**ஜல்லிக்கட்டுப் போட்டி சாதனை!**

தைத் திருநாளாம் தமிழர் திருநாள் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழா வருடம் தோறும் மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் வெகு சிறப்பாக நடைபெறும். உலகப்புகழ்பெற்ற இந்த ஜல்லிக்கட்டு போட்டிக்கு சோதனை வந்த காலத்தில் சட்டப்போராட்டம் கண்டு மீட்டெடுத்து கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள், அது முதல் தொடர்ந்து சிறப்பாக ஜல்லிக்கட்டு போட்டி நடந்து வந்த நிலையில் அதன் பின் வந்த ஆட்சியாளர்கள் நீதிமன்ற நெறிமுறைகளை முறையாக கடைப்பிடித்து ஜல்லிக்கட்டு போட்டியை நடத்தவில்லை எனக் கூறி மீண்டும் சோதனை வந்தது.

**தமிழர்களின் உணர்வு!**

அப்போது தமிழர்களின் உணர்வுகளை அறிந்து தமிழர்களின் வீர மிகு விளையாட்டு போட்டியை நடத்த அனுமதிக்க வேண்டும் என முதல் குரல் கொடுத்து அலங்காநல்லூர் வாடிவாசல் முன்பாக காளை வளர்ப்போர், மாடுபிடி வீரர்கள் மற்றும் பொதுமக்கள் ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் மத்தியில் மாபெரும் போராட்டம் நடத்தியது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை நாடே அறியும் .

அதை தொடர்ந்து நாடு முழுவதும் ஒட்டுமொத்த தமிழர்களும் போராட்டம் கண்டு ஜல்லிக்கட்டை மீட்டெடுத்து அனைவரும் அறிவார்கள்.

**சொகுசுகார் - தங்க மோதிரம் பரிசு!**

இத்தனை பெருமை வாய்ந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வரும் 17ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட உள்ளார்.

மேலும் சிறந்த காளைகளுக்கும், காளையர்களுக்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாகவும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாகவும் விலை உயர்ந்த சொகுசு கார்கள் மற்றும் தங்க மோதிரம் காசு ரொக்க பணம் உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இப்படி ஏராளமான பரிசுகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் வழங்கி பாராட்ட உள்ளார்.

**அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு!**


பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை பந்தல்கால் பதித்த நாள் முதல் நாள் தோறும் நேரில் சென்று மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கி வருகின்றார்.

இதேபோன்று மதுரை அவனியாபுரம் மற்றும் பாலமேடு ஜல்லிக்கட்டு ஏற்பாடுகளையும் ஆய்வு செய்து வருகின்றார். பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்கள் பாதுகாப்புடன் அமர்ந்து ஜல்லிக்கட்டு விழாவை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டவர்களும் தமிழர்களின் வீர விளை யாட்டை பார்த்து வியக்கும் வகையில் அமர்ந்து பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, சுகாதார மற்றும் குடிநீர் வசதிகளும் போதிய மருத்துவ வசதி ஆம்புலன்ஸ் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற வழிகாட்டுதலின் படி அனைத்து ஏற்பாடுகளும் மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் விழா கமிட்டியினர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

அதேபோன்று ஜல்லிக்கட்டு போட்டியை துவக்கி வைக்க வருகை தரும் இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்கும் பொருட்டு வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு வரவேற்பு கொடுக்கும் வகையிலும் சிறப்பான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.





இராயப்பேட்டையில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மத நல்லிணக்கத்தைப் போற்றிப் பாதுகாக்கும் சமத்துவப் பொங்கல் பெருவிழாவில் ஆயிரம் விளக்கு துதி இயேசுவுக்கு ஊழியங்கள் திருச்சபையின் போதகர் எஸ்.லியோ நெல்சன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் என்.பி.எம். சேக் அப்துல்லா, திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜி. சித்திக் அலி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் கு. அன்பு, மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் ம. கிரண் மற்றும் மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்களப் பணியாளர்களான தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்களும் பங்கேற்றனர்.

### மணிப்பூரில் இருந்து இரண்டாம் கட்டமாக

# இந்திய ஒற்றுமை நடைபயணம்!

## ராகுல் காந்தி நேற்று தொடங்கினார்!

இம்பால், ஜன. 15 –

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி மணிப்பூரில் இருந்து மும்பை வரை நடை பயணம் மேற்கொள்கிறார்.

இந்திய ஒற்றுமை நியாய நடைபயணம் என்ற பெயரில் நடைபெறும் இந்த நடைபயணம் மணிப்பூரின் தவுபல் மாவட்டத்தில் இருந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ராகுல் காந்தி தொடங்கினார்.



15 மாநிலங்களில் 6,713 கி.மீ. தூரம் நடைபெறும் இந்த யாத்திரை 67 நாட்கள் நடைபெறுகிறது. இதில் ராகுல் காந்தியுடன் கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்துகொள்கிறார்கள். இந்த யாத்திரைக்கான ஏற்பாடுகளை கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக இந்த யாத்திரையை மணிப்பூரின் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் தொடங்க காங்கிரஸ் திட்டமிட்டிருந்தது. ஆனால் அங்கு அனுமதி வழங்குவதில் மாநில அரசு கட்டுப்பாடுகளை விதித்தது. இதைத் தொடர்ந்து தவுபல் மாவட்டத்தில் இருந்து இந்த பயணம் தொடங்குகிறது.

இதைப்போல அசாமில் 2 இடங்களில் இரவு ஓய்வெடுப்பதற்கும் மாநில அரசு அனுமதி மறுத்தது. இதனால் மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. இந்த சலசலப்புகளுக்கு மத்தியில் ராகுல் காந்தியின் நடைபயணம் தொடங்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

### மயிலம் – வெங்கந்தூர் ஊராட்சியில்

# பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

மயிலம், ஜன.15-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாகப் பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, முழு கரும்புடன் ரூபாய் 1000 ரொக்கமாக வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க . ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.இந்தப் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று முதல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம் ஒன்றியம் வெங்கந்தூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில்

கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் யசோதரா தேவி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை செய்து வருகிறார்.அந்த வகையில் பொங்கல் திருநாளை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் கொண்டாடும் வகையில் தாய் உள்ளத்தோடு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 6 லட்சத்து 14 ஆயிரத்து 113குடும்ப அட்டைதாரர்களுக்கு 61.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொங்கல் பரிசு தொகுப்புவழங்கப் பட்டுள்ளதள்ளது.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான்தெரிவித்தார்.

முன்னதாக பேசிய மயிலம் தொகுதி பா.ம.க சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார் பேசுகையில் மகளிர் களுக்கு கலைஞர் உரிமை தொகையை வழங்கியும்

கடுமையான பொருளாதார நெருக்கடி நேரத்தில் கூட பொங்கல் பண்டிகை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள 2 கோடிக்கும் மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு உங்கள் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு மேலாண் இயக்குனர் இளஞ் செல்வி,ஒன்றிய கவுன்சிலர்கள்'பரிதா சம்சுதீன், கோமதி பச்சை முத்து, செல்வகுமார், கீதா சிவக்குமார், அரசு முருகன், ராஜ் பரத், கண்ணன், நிவேதிதா, ஊராட்சி மன்ற தலைவர்கள் வசந்தா விநாயகம், குமுதா ரமேஷ்,ரமேஷ், நிர்வாகிகள் இ. சேகர், சண்முகம், தீவனூர் சேகர், ஞான சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகரில் இயக்குவதற்காக

# 100 மின்சார குளிர்சாதன பேருந்துகள் வாங்க முடிவு!

## தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியீடு!

சென்னை, ஜன. 15 -

தமிழ்நாட்டில் மின்சார பேருந்துகளின் சேவையை கொண்டுவர அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி முதல்கட்டமாக (Gfx in) ஏ.சி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய 100 மின்சார பேருந்துகளை வாங்க தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது.

12 மீட்டர் நீளம் கொண்ட தாழ்தளத்துடனும், ஏசி வசதியுடன் கூடிய மின்சார பேருந்துகளை வாங்கவும் மற்றும் சார்ஜிங் தீர்வுக்கான வழங்கல், டிப்போ மேம்பாட்டுப் பணிகளுடன் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்காக அரசு போக்குவரத்து துறையால் இந்த டெண்டர் விடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவின் மற்ற பகுதிகளிலோ, வெளிநாட்டிலோ உற்பத்தி வசதிகள் மற்றும் தொடர்புடைய திறன்களைக் கொண்ட புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச வாகன உற்பத்தியாளர்கள் இதில் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆவணத்தை tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

### மாநில விவசாய அணி இணைச் செயலாளர்

# ஆர்.அருள்செல்வம் தந்தை ஜி.ராமதாஸ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

நாகை ஜன 15 -

மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், மாநில விவசாய அணி இணைச்செயலாளர் ஆர். அருள்செல்வம் தந்தை ஜி.ராமதாஸ் (வயது 90) 13.1.2024 அன்று இரவு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் மறைந்த ராமதாஸ்க்கு மகன்கள் ஆர். ரவிச்சந்திரன், ஆர். அருள் செல்வம் மகள்கள் பிரேமலதா. புஷ்பலதா, தாமரைச் செல்வி.ஆகியோர் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றியம் அரசூர் நாயுடு தெருவில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட அன்னாரது உடலுக்கு “கழக நிர்வாகி கள், கழகத்தினர் ஏராளமானவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.



தமிழ்நாடு முதல்வர்,மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடலின் நல்லாட்சியில்,இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா.சுப்பிரமணியன், ஆகியோர் வழிகாட்டுதலின் பேரில் ,வேளச்சேரி சட்டமன்ற தொகுதி, 177 வது வார்டுக்குட்பட்ட , இராஜலஷ்மி நகர்,மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாமன்ற உறுப்பினர்,வேளச்சேரி,பெ.மணிமாறன் வழங்கினார். உடன் பள்ளியின் தலைமையாசிரியர். மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ந.நீலகண்டன் மற்றும் பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக BLC நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசினை நேற்று (14.01.2024) அமைச்சர், பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி. ஆகியோர் 700 நபர்களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கினர். இந்நிகழ்வில் வடக்கு பகுதிச் செயலாளர் சொ.வேலு எம்.சி., தெற்கு பகுதிச் செயலாளர் வி. சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, 36 வது வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா வட்டக் கழகச் செயலாளர் க.பாபு ஏற்பாட்டில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா எம்.சி. கலந்து கொண்டு தூய்மை பணியாளர்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய ஊழியர்கள், பொதுமக்கள் என 1000 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் உதவித்தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, முருகன், ஹரிதாஸ், சி.எஸ்.ரவி, தினகரன், மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆயி அம்மாளின்

# கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப்படுத்துவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜன.15-

“தனது ஒரு ஏக்கர் 52 சென்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்கு வழங்கிய ஆயி அம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப் படுத்துவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**கல்விதான் உண்மையான, அழிவற்ற செல்வம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி ஏழேழு தலைமுறைக்கும் அரணாக அமையும் என்பதை உணர்ந்து தனது 1 ஏக்கர் 52 சென்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்காகக் கொடையாக அளித்துள்ளார் மதுரை கொடிக்குளத்தைச் சேர்ந்த ஆயிஅம்மாள் என்கிற பூரணம் அவர்கள்.**

**முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்!**

**ஆயிஅம்மாளின் கொடையால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்கள். கல்வியையும், கற்பித்தலையும் உயர்ந்த அறமாகப் மதிக்கும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் ஆயிஅம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் வருகிற குடியரசு நாள் விழாவில் அரசின் சார்பில் அவருக்கு முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### கழக மீனவர் அணி சார்பில் – திருவொற்றியூரில்

# சமத்துவப் பொங்கல் விழா - மாற்றுத் திறனாளிகளுக்குப் பரிசுகள்!

## கே.பி.சங்கர் தலைமையில்! மாதவரம் சுதர்சனம் - கலாநிதி வீராசாமி வழங்குகின்றனர்!

சென்னை, ஜன.15-

திராவிட முன்னேற்றக் கழக மீனவர் அணி சார்பில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா - மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ. வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கே.வி.கே.குப்பத்தில் உள்ள தியாகச்சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகில், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், எம்.எஸ். நாகலிங்கம், இ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் வட்டக் கழக செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் தலைமையில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற உள்ளது. காலை 9 மணி அளவில் அருள்மிகு ஸ்ரீ பட வேட்டம்மன் ஆலய அருகில் மீனவ கிராம மக்கள் பொங்கல் வைக்க உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாநில மீனவர் அணி துணைத் தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளுக்கு அரிசி, பருப்பு எண்ணெய் தொகுப்புகளுடன் பொங்கல் பரிசு வழங்குகிறார்.

இந்த சிறப்புக்குரிய சமத்துவ பொங்கல் விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அகழக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அதுசமயம் பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மீனவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, ஆட்டோ தொமுச, தொழிற்சங்கம், மின்கழகம் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஐயா கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநில மீனவர் அணி சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### டி.சுந்தரம் வரவேற்புரை! ஜெ.கஜபதி தலைமை!

# மாதவரம் 30(அ) வட்டத்தில் சமத்துவப் பொங்கல் விழா! திருவள்ளுவர் நாள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ சிறப்புரை! எஸ்.நந்தகோபால் - திருமலை துரைசாமி பங்கேற்பு!

சென்னை,ஜன,15-

சென்னை வட கிழக்கு மாவட்டம் மாதவரம் 30(அ) வட்டத்தில் சத்துவ பொங்கல் விழா மற்றும் திருவள்ளுவர் பிறந்த நாள் விழா நாளை (16.1.2024) காலை 10. மணிக்கு விநாயகபுரம் செல்வ லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

வட்டச் செயலாளர் டி.சுந்தரம் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

ஜெ.கஜபதி தலைமை வகிக்கிறார்.

குரு என்கிற சந்திரசேகர்,டி.ரமேஷ் குமார்,ஈ.இராமன்,எஸ்.கண்ணன்,என். சுரேஷ்,சி.பரமேஸ்வர்,ஹபிப் ரஹமான்,பி.எஸ்.என்.எல். கே.தயாளன், கே. நரேந்திரன்,ஏ.வி.முருகன், எம்.சீனிவாசன், பி.எஸ்.என்.எல். குமார்,வெங்கட்ராமன்,கருணாநிதி,காஞ்சி சண்முகம்,பி. வி.ராஜி, செண்பகராஜ்,டி. வி.எஸ். கோபி.,வி.பாஸ்கர், டி.உமாமகேஷ்வரி, எஸ். மாதவி,எஸ்.நந்தினி, எஸ். பிரான்சிஸ், ஏ.எஸ்.ஆர். மனோகரன், ஏ.சீனிவாசன், டி.சுரேஷ், ஆர்.சி.ஜெய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து நல உதவிகள் வழங்குகிறார்.

விழாவில் ஜி.துக்காராம், எஸ்.நந்தகோபால்,திருமலை ஜி.துரைசாமி, புத்தகரம் ஈ. ஏழுமலை, எம்.சரவணன், மு.குட்டிமோகன், துரை ஸ்ரீராமுலு, மோ.குணசுந்தரி, எஸ்.ஏ.சீனிவாசன்,லட்சுமி காந்தன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி,கே.யுவராஜ், ஆர்.எஸ்.ரவிந்திரன், சி. ஹரிஸ், டாக்டர் ஏ.நிவேதிதா, டாக்டர் ராஜேஷ்,

எஸ்.சத்தியமூர்த்தி, விஜயலட்சுமி,ஆனந்தன், தே.ரமணன் ,எம்.செல்வம், எஸ்.என். கோதண்டன், வி.எம். சாரதி,சி.ஆனந்த், எல்.ஜி.செல்வம், பா.அசோக்குமார், இரா. கண்ணன், டி.ஜெ.தசரதன்,முத்து டி.குருமூர்த்தி தேவிகௌதமன் வி.டி. மூர்த்தி, ஜி.கஜெந்திரன் தனசேகர், ஆசிரியர் வி.கணேசன், ஆர்.தேவன், கௌதம்பாலாஜி, கௌதமன், சாரதிநகர் முருகன், என்.சுரேஷ், டி. தரணி வேலு, போஸ்ட் வெங்கடேஷ், மூர்த்தி, இ.ராமசந்திரன், ஆர்.சுந்தர்ராஜ், ஆர். பக்தா, லயன்ஆனந்தன்,

ஜி.ராஜேஷ், ஜி.என்.பிரசாத், பி.சந்திரன், வி.கதிர்வேலன், எஸ்.ஜெகன், டைணிபிரபாகரன், டைலர் பாஸ்கர், ஆட்டோ உமாபதி,பி.ராஜலட்சுமி, எஸ்.துளசி, டி.கருணாநிதி, ஏ.வெங்கடேஷ், பாண்டுரங்கன், டி.பழனி, எம்.ஸ்ரீதர், முல்லைஆறுமுகம், மிட்டாய் சேகர், வேலு நரசிம்மன், எல்.எம்.ஏகுராஜ், தேவேந்திரன், பிரவின், சிவக்குமார், காந்திதெரு தேவராஜ், வி.பக்தன், வி.எம்.எஸ்.சூரியா மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எஸ்.என்.ராஜி,வி.தினகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்குகிறார்!

# மாதவரம் தெற்கு 28வது வட்டத்தில் சமத்துவப் பொங்கல் - நல உதவிகள்!

## தலைமை: டி.ராமகிருஷ்ணன்! எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் - மிசா. பா.மதிவாணன் பங்கேற்பு!

சென்னை, ஜன.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 28 வட்டக் கழகத்தின் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (16.1.2024, செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் மாதவரம் கண்ணபிரான் கோயில் தெரு (ஜாங்கிரி ஷாப் அருகில்) நடைபெறுகிறது.

இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பரிசுப் பொருட்களை வழங்குகிறார்.

விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணை செயலாளர் டி.ராமகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

விழாவிற்கு 3வது மண்டலக் குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால் எம்.சி., மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜீ.துக்காராம், தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா.பா.மதிவாணன், 28வதுவட்டக் கழக செயலாளர் பிரேம்குமார், மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத் தலைவர் டி.ஆர்.ரவீந்திரகுமார், எஸ்.எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி.கே.கோபால், டி.ஆர்.செங்குட்டுவன், கே. பி.உசேந்திரன், ஜெயா, செல்வி, அசோக்குமார், ஏ.முனுசாமி, எஸ்.எம். மோகன், ஏ.சசிகுமார், சி. கே.ஜி.தர்மராஜ், மா.பொ. வே.ராஜா, டி.மதன், பி.காசிராஜன், டி.ஆசைத்தம்பி, எஸ். நிசார் அகமத், எஸ்.பாலாஜி, வட்ட கழக செயல்வீரர்கள் டி.ராமன், வேனு ககாரியன், எஸ்.சிவசங்கரன், இ.விக்கி, ஆட்டோ ரவி, செல்வ ரவி, மாறன், எம்.மதி, ராஜ்குமார், கே.எஸ்.ரவி, சுதாகர், ரமேஷ், எஸ்.ஆரோக்கியராஜ், மா. கோ. விஜய் உதயசூரியன், ஜெ.நெப்போலியன், இ.ஏஞ்சல், எம்.மகேஷ், எஸ். வினோத், டி.ஆனந்தன், பா. நெல்சன், டி.பிரபா, ஏ. வினோத், வி.கார்த்தி, டி.சுமிர், எம்.அஜய், மகளிர் அணி யு. காந்திமதி உதயசூரியன், செல்வி, சர்லின், தேவி, அனிதா, செல்வி, யு.ரமா, உதயசங்கர், எம்.வள்ளிமுரளி உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 28-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி சு.கனிமொழி சுரேஷ் எம்.சி. செய்துள்ளார்.

### வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை! எழும்பூர்

# 99வது வட்டத்தில் 500 பேருக்கு அறுசுவை உணவு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி. – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 15 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 99வது வட்டக் கழகம் சார்பில் தை -1 தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் விழாவையொட்டி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று (15.01.2024 - திங்கள்) காலை 8 மணியளவில் புரசைவாக்கம், பொன்னன் தெருவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவை வழங்குகிறார்.

வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ். ரவிச்சந்திரன், சொ. வெலு, கோ.மணி, புனிதவதி எத்திராசன், பரிதி இளம் சுருதி, ஜி.தாமோதரன், பி.சி. சம்பத்குமார், டி.செபாஸ்டின், வி.ரவி, ஏ.அஜித், சரவணன், இ.எம்.ராஜன், எம்.ராஜ், ஜெ.பானு, பி.புஷ்பலதா, கே.ஆர். முரளி, பி.வரதராஜன், ரா.முரளி, எம். கோமளா, ஆர்.எஸ். வெங்கடேசன், ஏ.சுகுமார், என்.சீனிவாசன், பி.சிவா, ஆர்.மாது, எஸ்.மோகன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்று சிறப்பிக்கும்படி வட்டக் கழகச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.





மதுரவாயல் சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க கணபதி தலைமையில் 151வது வட்ட செயலாளர் அ. மோசஸ் ஏற்பாட்டில் 151வது வட்டத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் அருகில் தமிழர் திருநாள் கொண்டாடும் வகையில் 1500 நபர்களுக்கு பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வி. விஜயன்,சேகர்,அவை தலைவர் செ. இராமையா, துணை செயலாளர் கே. முரளி, விமலா, பகுதி பிரதிநிதிகள் கோ. கண்ணதாசன், கே. குமார், மோ. சுந்தர்,பரிமளா பூத்தபேடு ரகு,குட்டி,லோகேந்திர பாபு,பி.கே. சண்முகம்,க. தீபன்,இ.பிரசாந்த்,ராஜா,எம்.தங்கராஜ், சீனு,ஆனந்தி,151வது வட்டத்திற்குற்பட்ட நிர்வாகிகள். பொதுக்குழு உறுப்பினர் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணைஅமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாள் –தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் ஏற்பாட்டில் வட்டக் கழக நிர்வாகிகள், முன்னோடிகளுக்கு புத்தாடைகளை, கரும்பு தலைமைச் செயற்குழு உறுப்பினர் துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதிகள் ஜி. செல்வராஜ், வி. ரமேஷ்குமார், வட்ட அவைத் தலைவர் தா .கோ. வெங்கடேசன், பகுதி பிரதிநிதிகள் ஏ. சக்திவேல், எம். நாராயணமூர்த்தி, ஆர். சீனிவாசன், எஸ். அசோக்குமார், கே. கே. மோகன், மாவட்ட துணை அமைப்பாளர் ஜே. ஜெயராமன், எஸ். சுரேஷ், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. ஜெயவேல், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் ரவீந்தர், கே. சுகுமார், காமராஜபுரம் ராமர், சிங்கமுத்து, வழக்கறிஞர் குமரன், லிங்கப்பன், கோடீஸ்வரன், இளைஞர் அணி கழகத் தோழர்கள் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடியில் அமைந்துள்ள கழிஞ்சூர்தாரா படவேடு ஏரிகளில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டார். இதில் துணை மேயர் எம்.சுனில் குமார், பகுதி செயலாளர் வன்னியராஜா, தாசில்தார் ஜெகன், மாமன்ற உறுப்பினர் டீட்டா சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க. கூட்டணியின்

# மதவாத அரசியலை ‘இந்தியா’ கூட்டணி அம்பலப்படுத்த வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன.15-

இராமன் கோவில் திறப்பு என்பது கொடுத்த வாக்குறுதியை மோடி நிறைவேற்றாததை மூடி மறைக்க மேற்கொள்ளும் தந்திர வித்தை ‘இந்தியா’ கூட்டணி இதனை மக்களிடம் எடுத்து வைக்கவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அயோத்தியில் கட்டி முடிக்கப்படாது அரை குறை நிலையில் உள்ள இராமன் கோவிலில், அவசர அவசரமாக இம்மாதம் 22-ஆம் தேதி பிரதமர் மோடியால் இராமன் சிலை பிரதிஷ்டை செய்யப்படுகிறது என்ற நிலையில், “நாங்கள் அங்கே சென்று அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது” என்று முதலில் பூரி சங்கராச்சாரியாரும், பிறகு மற்ற மூன்று சங்கராச்சாரிகளும் “இது ஸநாதன தர்மத்திற்குப் புறம்பானது” என்ற கூறி, அறிவிப்புச் செய்திருப்பதற்குப் பா.ஜ.க.வின் பதில் என்ன தெரியுமா?

இராமனை தேர்தல் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தி, பக்தி மயக்க பிஸ்கெட்டுகளைத் தந்து, மக்களின் மதவெறியை மூலதனமாக்கி, வாக்கு சேகரிக்கும் ஒரு வித்தை என்பதை நாடு உணரத் தலைப்பட்டு இருக்கிறது.



அதனால்தான் இந்த வித்தைக்கு தாங்களும், காட்சிப் பொருளாகவோ, உடன்படுவோராகவோ இருக்கமாட்டோம் என்று அவர்கள் அனுப்பிய அழைப்பைப் புறக்கணித்துள்ளனர் காங்கிரஸ் தலைவர்களும், கம்யூனிஸ்டுகளும், அகிலேஷ் கட்சியும், மம்தாவின் திரிணாமுல் காங்கிரசு கட்சியும், பீகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியும்.

‘பக்தி’ என்பது தனி மனிதனைப் பொறுத்தது; அரசு, அமைப்பு, தேர்தல் என்பது ஜனநாயகத்தின், பொதுமக்களின் உரிமை என்பதை நன்கு புலப்படுத்தியுள்ளனர்.

1. இரண்டு கோடி பேருக்கு ஆண்டுதோறும் வேலை தருகிறோம்.

2. விலைவாசியை இறக்கிக் காட்டுவோம்.

3. கருப்புப் பணத்தை வெளியே கொண்டு வந்து தலைக்கு ரூ.15 லட்சம் போடுவோம்.

4. விவசாயிகளின் வாழ்வை இரண்டு மடங்காகப் பெருக்குவோம்

5. அவர்களது விளை பொருளுக்குக் குறைந்த பட்ச ஆதார விலையை (MSP) நிர்ணயிப்போம்.

போன்ற பலவற்றை காற்றில் பறக்கவிட்டதை மக்கள் கேள்வியாய்க் கேட்டு, பிரச்சார அம்புகள் கிளம்புவதைத் தடுத்து, திசை திருப்பவே பக்தியை, மதத்தை, இராமர் கோவில் திறப்பை பிரதமர் மோடி அவர்களே சொல்லும் ஸநாதனத்திற்கு விரோதமாக நடந்து கொண்டு, ஒன்றிய அரசு, உ.பி. அரசு இயந்திரத்தை முழு மூச்சாகப் பயன்படுத்திடும் நிலை. உறுதி எடுத்துக்கொண்ட அரசமைப்புச் சட்டத்தின் மதச்சார்பின்மை Secula மூலக் கொள்கையை காலில் போட்டு மிதிப்பது அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கை அல்லவா?

இதை பூரி சங்கராச்சாரியாரே நேற்று முன்தினம் உ.பி.யில் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளது மிகவும் சரியான உண்மையாகும்.

முழுமையாகக் கட்டி முடிக்கப்படாத இராமர் கோவிலை பிரதமரை முன்னிறுத்திச் செய்து ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஒவ்வொரு “வித்தை” என்ற அடிப்படையில்தான் இது நிகழவிருக்கிறது. பிறகு உறுதிமொழிகள் வெறும் ‘ஜ-ும்லா’தான்!

‘இந்தியா’ கூட்டணியினர் கொஞ்சம்கூட தயங்காமல், இதனை மக்களிடையே அம்பலப்படுத்தத் தயக்கம் காட்டக்கூடாது.

மக்களின் பசி தீர்க்க, வறுமையைப் போக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க செயல்படவேண்டிய ஒன்றிய ஆட்சி இப்படி மத வியாபாரத்தில் இறங்கி வாக்கு வேட்டைக்கு ஆயத்தமாவது நியாயமா?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நெல்லை – பாளையங்கோட்டையில்

# கேலோ இந்தியா விழிப்புணர்வு வாகனப் பிரச்சாரம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, ஜன. 15 -

நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கத்தில் கேலோஇந்தியா விழிப்புணர்வு வாகனத்தை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், மாநகராட்சி துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

நெல்லை மாவட்ட விளையாட்டுமற்றும்இளைஞர் நலத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகள் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

மகாபலிபுரத்தில் செஸ் போட்டி நடத்தியதில் தமிழக அரசு மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது. நம்மால் எதையும் செய்ய முடியும் என்ற நிலையை உருவாக்கிய தமிழக அரசுக்கு கேலோ விளை யாட்டுப் போட்டியை நடத்த ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகியபெரு நகரங்களில் இந்த விளையாட்டுபோட்டி நடக்கிறது அதற்காக இலச்சினையை வீரமங்கைவேலுநாச்சியார் போன்று வடிவமைக்கப்பட்டு நமது வீரத்தை அடையாளப்படுத்த வேண்டும் என்றுஉருவாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விளையாட்டு குறித்து தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்து

வதற்காக இந்த கேலோ ரதம் வடிவமைக்கப்பட்டது. தற்போது இந்த ரதம் நெல்லை மாவட்டத்திற்கு வந்துள்ளது. நெல்லை மாவட்டம்விளையாட்டில் சிறந்து விளங்கும் மாவட்டம் ஆகும். கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் தமிழகம்முழுவதும்மாவட்டம் வாரியாக முதலமைச்சர் கோப்பை காண விளையாட்டுப் போட்டியில் முதலிடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் பெற்றவர்கள்800க்கும்மேற்பட்ட விளையாட்டு வீரர்களை சென்னைக்கு அனுப்பினோம். அதில் 32 மாவட்டங்களில் 6வது இடத்தில் நமது மாவட்டம் வெற்றி பெற்றது.

நமக்கெல்லாம்பெருமையாகஇருக்கிறது. இனிவரும் ஆண்டில் நெல்லை மாவட்டம் முதலாவது இடத்தை பிடிக்க வேண்டும். மேலும் விளையாட்டுப் போட்டி நடத்தப்படுவதால் மாணவர்களின் மன அழுத்தம் குறைக்கப்படுகிறது. மாணவ, மாணவிகள்விளையாட்டுதங்கள்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறுபேரவைதலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக் உட்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு 111வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஏ.நந்தினி எம்.சி. தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் சி.எஸ்.ஆர். சந்தோஷ் ஏற்பாட்டில் 111வது வார்டில் பொதுமக்கள் மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை மற்றும் தையல் இயந்திரம் போன்ற நலத்திட்ட உதவிகளை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் வழங்கினர். இவ்விழாவில் 111 மற்றும் 111அ வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.பாபு எப்.பீட்டர் ஜான் மற்றும் மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி தம்பிமார்கள் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

# எத்திசைத் தமிழரும் இன்புற்றுப் பொங்குகவே!

**பொ**ங்கலே! தமிழர்க்குப்
பொலிவூட்ட வருகின்ற
மங்கலத் திருநாளே!
மாவளப் பெருநாளே!
கங்குலை விரட்டிடும்
கதிரவன் போற்றியே
திங்களின் வெண்மையாம்
செவ்வரும்புப் புத்தரிசி
செங்கரும்பு வெல்லமும்
சேர்த்துநற் புதுப்பானை
பொங்கிடப் பொங்கலோ
பொங்கலென எழுச்சியாய்
வெங்கலக் குரலெழுப்பி
வீடெல்லாம் கொண்டாடும்
பொங்கலே பொங்குகவே!
புத்துணர்ச்சி மல்குகவே!

இங்கிது வரையிலே
இடர்பல விளைத்திருந்த
வெங்கனல் துன்பங்கள்
வேதனைகள் கொடுமைகள்
தங்காமல் நீங்கிட,
தழைத்தின்பம் ஓங்கிடப்
பொங்கலே, தமிழரெலாம்
பொங்கிடப் பொங்குகவே!

தெங்குயர் தோப்புகள்
தேன்மலர்ச் சோலைகள்
செங்கயல் பொய்கைகள்
திரைத்தோடும் ஆறுகள்
பொங்கிடும் அருவிகள்
புதுவெள்ளம் ஆழ்குளங்கள்
தங்கிடும் நீருடன்
தண்வயல் நெற்பயிர்
தொங்கிடும் வாழை,மா
சுவைப்பலா எனக்கனிகள்
கொங்கெழும் இன்குரல்
குறுங்குயில் எழில்மயில்
தங்கம்போல் குருவிகள்
தந்தின்பம் மேவிடப்
பொங்கலே எழுகவே!
புன்மைகள் அழிகவே!

பாடென்றும் படுகின்ற
பயன்கருதா துழைக்கின்ற
ஈடொன்றும் இல்லாத
இரக்கத்தின் ஊற்றான
மாடொன்றே செல்வமென
மண்ணிலே உழல்கின்ற
காடொன்றே எப்போதும்
கதியென நம்புகின்ற
கூடொன்றே ஆள்கின்ற
கோட்டையாய்க் கருதுகின்ற
மேடென்றும் ஏறாமல்
மேன்மேலும் விழுகின்ற
கேடொன்றும் அறியாமல்
கேண்மையாய் இருக்கின்ற
பீடொன்றே வாழ்க்கையின்
பெருமிதம் எனத்திகழும்
ஓடென்றே தேய்ந்தாலும்
உழவர்கள் களிக்கின்ற
ஓடைபோல் மகிழ்விக்கும்
ஒப்பற்ற திருநாளில்
நாடெங்கும் பொங்கலிட்டு
நன்றியுடன் போற்றுவோம்!

ஏடெங்கும் எழுதியே
இனிப்பாகப் பேசியே
வாடுகின்ற வாட்டத்தை
வருத்துகின்ற ஏழ்மையை
நீடுகின்ற அவர்துயரை
நீக்காமல் இருந்தநிலை
ஓடுகின்ற வழிசெய்ய
ஒவ்வொரு பொழுதுமே
நாடுகின்ற தளபதி
நல்லாட்சி போற்றியே
கூடிநின்று பொங்கலோ
பொங்கலெனக் கூவுவோம்!

எத்தனையோ நன்னாள்கள்
இருந்தாலும் நாட்டிலே
அத்தனைக்கும் மேலான
அறிவான திருநாளாய்
எத்திசையும் ஒலித்திட
எடுத்துரைத்த அண்ணாவை
வித்தகப் பெரியாரை
வினைவல்ல கலைஞரை
புத்தரிசிப் பொங்கலிட்டுப்
பொழுதெலாம் போற்றுவோம்!
எத்திவரும் இடர்க்கூட்டம்
இல்லாமல் போக்குவோம்!
முத்தாகக் குறள்மணிகள்
மொழிந்த திரு வள்ளுவரை
மெத்தவும் மனத்திருத்தி
மேன்மையை ஆக்குவோம்!

கொத்தவே பறக்கின்ற
கொடுங்கழுகு பருந்துகள்
மொத்தமும் ஓடவே
மொய்த்தின்பம் கூடவே
மத்தளம் யாழ்குழல்
மகிழ்விசை பாடவே
நத்தியே எங்கெங்கும்
நற்களிப்பில் ஆடவே
தத்துகடல் சூழ்ந்துள்ள
தமிழ்நாடு மட்டுமின்றி
எத்திசைத் தமிழரும்
இன்புற்றுப் பொங்குகவே!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

### சேலம் 2-வது மாநில மாநாட்டில்

# திருவொற்றியூர் மத்திய பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## பகுதிக் கழகக் கூட்டத்தில் ஏ.வி. ஆறுமுகம் அறிவிப்பு!

சென்னை, ஜன. 15 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவெற்றியூர் மத்திய பகுதியில் வருகிற 21.01.2024 அன்று சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பகுதி கழக செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவருமான ஏ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநாட்டிற்கு இளைஞர்களை பெருமளவில் அழைத்து செல்வது குறித்து விவாதிக்கப்பட்டது

இதில் மாவட்ட இளைஞர் அணி துணைச்செயலாளர் கேபிள் கணேசன் முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் வா.முத்துசாமி, எம்.எஸ்.நாகலிங்கம், பகுதி கழக துணைச் செயலாளர் வி.ஜி. தினகரன், ஆர்.டி. ரமேஷ் குமார், துர்கா கோதண்டம், வட்டச் செயலாளர்கள் டி.கரிகால சோழன், சாலை டி.கணேசன், மு.செல்வம் மற்றும் பகுதி கழக வட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்பு!

# 78 ‘அ’ வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா!

## வட்டச் செயலாளர் ந.பாலு வேண்டுகோள்!

சென்னை ஜன:15

78அ வட்டச் செயலாளர் ந.பாலு விடுதுள்ள அறிக்கை வருமாறு :

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட 78(அ) வட்டத்தில் பொது மக்களுக்கு சமத்துவ பொங்கல் விழா பரிசு பொருட்டுகள் வழங்கும் நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ.வேலு முன்னிலையில் இன்று {15012024. திங்கட்கிழமை} காலை 8 மணி அளவில் உமாசுராஜ் மஹாலில் நடைபெறவுள்ளது.

பரிசு பொருட்டுகளை வழங்குபவர்கள் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்பி.

இந்நிகழ்ச்சியில் தொகுதிக்கு உட்பட்ட இந்நாள் முன்னாள் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ந.பாலு தெரிவித்துள்ளார்.



விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 3000 கழகத்தினருக்கு மற்றும் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 500 இளைஞர் அணி தோழர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா, மாமன்ற உறுப்பினர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் பொன்.வர.லோகு, ரத்னா லோகேஷ், நிலவரசி துரைராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை பழனிச்சாமி, இரா.சொழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், கி.சதீஷ்கண்ணன், அன்பழகன் சோ.சொந்தில்குமார், எஸ்.மைக்கில், வீ.ஏ.ராஜா, மு.கோவிந்தராஜ், பழக்கடை பாஸ்கரன், தஞ்சை பாபு, சசிகுமார், கனிமொழி, நிஷா, சங்கர்கணேஷ், கிருஷ்ணகுமார், எழில் பாண்டியன், ராமபுரம் ரவி, தியாகராஜன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர திமுக சார்பில் தைத்திருநாளை முன்னிட்டு திருவேற்காட்டில் சமத்துவ பொங்கல் நிகழ்ச்சி நகர கழகச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் கலந்துகொண்டு சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து கலை நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற நபர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் வட்டச் செயலாளர் காந்தி நகரப் பொருளாளர் சரவணன், நகர துணைச் செயலாளர் குமாரசாமி மாவட்ட பிரதிநிதி செல்லதுரை, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பேபி ஸ்ரீ, நகர மகளிர் அணி அமைப்பாளர் அமலேஸ்வரி, வட்ட கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பி.உமாபதி, நளினி குருநாதன், பரிசமுத்து, இளங்கோ, சேது, பன்னீர்செல்வம், வழக்கறிஞர் சதீஷ், என்.ராஜி, நாராயணன், நரேஷ், செல்வி, தங்கம், உள்பட பலர் உள்ளனர்.

## புதுடெல்லியில், பனிமூட்டம்! ரெயில் சேவை பாதிப்பு!

புதுடெல்லி, ஜன. 15 - வட மாநிலங்களில் கடும் பனிமூட்டம் நிலவுகிறது. தலைநகர் டெல்லியில் காலை வேளையில் வெப்ப நிலை 3.6 டிகிரி செல்சியசுக்கும் கீழ் செல்வதால் கடுமையான குளிர் காணப்படுகிறது.

இதற்கிடையே, கடுமையான பனி மற்றும் குளிர் காரணமாக வட மாநிலங்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

இமாச்சல பிரதேசம், டெல்லி, உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்களின் ஒரு சில இடங்களில் உறை பனி ஏற்பட வாய்ப்புள்ளது. உத்தர பிரதேசம், டெல்லி, பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களில் கடுமையான பனிமூட்டம் நிலவும். பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் குளிர் அதிகமாக காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடும் பனி மூட்டத்தால் 50 மீட்டருக்கும் குறைவாக உள்ள தொலைவு மட்டுமே கண்ணுக்கு புலப்பட்டால் ரெட் அலர்ட் எச்சரிக்கையும், 50200 மீட்டர் வரை தெரிந்தால் ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், டெல்லியில் கடும் பனிமூட்டம் காரணமாக 20க்கும் மேற்பட்ட ரெயில்கள் தாமதமாகின. 10க்கும் மேற்பட்ட விமானங்களின் வருகை, புறப்பாடுகளில் தாமதம் ஏற்பட்டன.

### சேலம் இளைஞர் அணி 2வது மாநாட்டில்

# நாகை மாவட்ட இளைஞர் அணியினர் வெண்சீருடையில் திரளாகப் பங்கேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, ஜன.15 - நாகை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன் தலைமைத் தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், கற்பகம், பொரு ளாளர் மு.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் வரவேற்றார். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், என்.ஆனந்த், கே.பழனியப்பன், என். சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர் வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மரி முத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசி.குமார், இல. பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கே. பாண்டியன், உமாசெந்தாமரை, பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.முகமது சுல்தான், கா.அட்சய லிங்கம், சி.சுப்பரமணியன், எக்ஸ்.மரிய சார்லஸ் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என். கார்த்த, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, முருகானந்தம், புவனேஷ்வரி, ஆர். துரைராஜ், எஸ்.வி.டி.அருள், சத்தியமூர்த்தி, அ.பாரிபாலன், இளம்.சுந்தர், எஸ்.சந்தோஷ், செ.புவனேஸ்வரி, த.தமயந்தி, வ.கமல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், தி.கலையரசன், எஸ்.டேனியல்சத்தயா, பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்.

கழக இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21ம் தேதி மாநில உரிமை மீட்பு மாநாடாக பெண்களை மீட்ட புரட்சியாளர், அரசுப் பதவிகள் வகிக்காமல் அரசாங்கத்தை வழிநடத்திய அரசியல் ஆசான் பகுத் தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பெயரில் பெரியார் நுழைவு வாயில், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என மூன்று சொல் திருக்குறள் தந்த திருவள்ளுவனாக, தமிழ்நாடு என பெயர் சூட்டிய தலைமகன், தி.மு.க. என்ற மாபெரும் இயக்கத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் அண்ணா திடல், தன் வாழ்நாளெல்லாம் தமிழ்மொழிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், ஓயாமல் உழைத்த ஒப்பற்ற தலைவர் சமூகப் போராளி செம்மொழிக் கண்ட சேர, சோழ, பாண்டியரான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கலைஞர் அரங்கம், தாடியில்லா பெரியார், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு நண்பர் இனமானப் பேராசிரியர் அவர்கள் பெயரில் பேராசிரியர் மேடை, சேலத்து சிங்கம் வீரப்பாண்டியார் அவர்களின் பெயரில் வீரப் பாண்டியார் கொடி மேடை, தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி என்று அனைவராலும் போற்றப்படுகின்ற முரசொலி மாறன் அவர்களின் பெயரில் புகைப்பட கண்காட்சி என மாநாடு முழுவதும் கழகத்தினர் பெயரை வைத்து சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநாட்டில் வெண் சீருடையுடன் இளைஞர் அணியினர் நமது மாவட்டத்தின் சார்பில் திரளாக கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை கோட்டுக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளிலும் வாக்காளர் பட்டியலில் உள்ள மொத்த பாகங்களின் (பூத்) அடிப்படையில் 7 பாகங்களுக்கு ஒரு பொறுப்பாளர் வீதம் நியமனம் செய்யப்பட்ட பொறுப்பாளர்களின் பட்டியலை ஒரு வாரத்திற்குள் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஓ.எம்.ஆர். படிவம் மற்றும் நோட்டு புத்தகம் இது வரை பூர்த்தி செய்து வழங்காமல் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் இனியும் தாமதப்படுத்தாமல் விரைவில் மாவட்ட கழகத்திடம் பூத்தி செய்து ஒப்படைக்குமாறு ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களை மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்வது என்றும்,

நாகை மாவட்டத்திற்கு நாகை மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயம் கட்டப்பட்டு வரும் நிலையில் அதன் வரவு செலவு கணக்குகளை முறையாக கையாளும் விதமாக தலைமைக் கழகம் அறிவுறுத்தலின் படி மாவட்ட தி.மு.க. எனும் வங்கி கணக்கு தொடங்கப்பட்டு அதனை நிர்வாகிக்கும் முழு பொறுப்பு மாவட்ட கழகச் செயலாளருக்கும், மாவட்டக் கழக பொருளாளருக்கும் வழங்குவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



தமிழர் திருநாளாம் தை பொங்கல் தினத்தையொட்டி சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8–வது வட்டக் கழகத்தில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மற்றும் மாவட்ட கழகப் பிரதிநிதி ஜெ.பி.சந்தான கிருஷ்ணன் ஏற்பாட்டில் பகுதி வாழ் மக்கள் 500 பேருக்கு அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் பகுதி மக்களுக்கு சுகம் மருத்துவமனை மருத்துவர்கள் மூலமாக இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் எஸ். முத்தையா ஏகா. கார்த்திகேயன், கே.கார்த்திகேயன், பால உமாபதி, டி.ஜி.ஆர்.மணிவண்ணன், எம். ஜெ.பக்தவச்சலம், எம்.எஸ்.பாண்டியன், எம்.கார்த்திக், வி.ஆர். சீனிவாசன், விஜயராகவன், ரா. கணேசன், கென்பட் முனுசாமி, பரணிகுமார், கே. ராமலிங்கம், பி.பி.ஜோதி, சம்பத், மற்றும் பல நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சின்னத்தில் பாதி பெயர்.... தலைவனில் பாதி பெயர்!



ஆரவாரம் இல்லை.....

ஆர்ப்பாட்டம் இல்லை....

உதைப்பேன் உடைப்பேன் எனும் ஆத்திரக் கூச்சலில்லை!

கழகத்தின் மூச்சையும், தமிழினத்தின் மூச்சையுமே தன் மூச்சாய்க் கருதி உழைக்கிற இளைஞன் அழைக்கிற கணத்தில் சேலத்தில் குவியத் திரள்கிறது தமிழகம்!

பரபரப்பு அரசியலால் பிழைப்போருக்கிடையே தமிழ் மண் செழிக்க உழைக்கிற ஓர் இளைஞன் ஐயத்திற்கிடமின்றி அரசியல் அதிசயம்! காட்டாற்று வெள்ளம் போல் கடுகி விரையாமல், மூச்சரைக்க ஓடி நொடியில் மறையாமல்,

தன்னிரு கரைகளையும் தன்மையாய்த் தழுவி, நின்று நிதானமாய் நகர்கிறது உதயநதி!

தாய் மரத்தை தாங்கும் விழுதாய் இருப்பதையே விருதாகக் கருதி முழுமூச்சாய் உழைக்கிறது!

தமிழர்களின் தலைநிமிர்த்தும் திராவிட மாடலை அங்குலம் அங்குலமாய் இளமையால் இழைக்கிறது!

தமிழ்நாட்டின் இருள் கிழித்த சின்னத்தில்

பாதி பெயர் .... தண்டவாளத்தில் தலை வைத்த தலைவனில் பாதி பெயர் ....

இரண்டின் பலத்தையும் இரட்டிப்பாக்கி,

சனாதனச் சதிகளை விரட்டி அடிக்கவே சேலத்துக்கழைக்கிறார் இளைஞர் தளபதி!

மாங்கனி சேலத்தில் மாடர்ன் தியேட்டர் தான் இளமையில் கலைஞரின் முதற்புள்ளி. தந்தையின் தந்தை உருவான சேலத்தில், கழகத்தின் எருவாகத் திகழ்கிற இளையோரைத் திரட்டுகிற இளைஞனைக் கலைஞரன் ஆக்கியது கோபாலபுரம் பள்ளி!

ஒன்றிய அரசின் 'எய்ம்ஸ்' மோசடியை ஒற்றைச் செங்கல்லால் ஊரறியச் செய்தவன்,

கழகத்தின் அஸ்திவார செங்கல்லாய்த் திகழும் இளைய சக்தியை உலகு அறிய அழைக்கிறான்.

சமூக நீதியையும், பல்சமய உரிமைகளையும், தமிழர் நலத்தையும், தமிழ் நிலத்தின் வளத்தையும் எஃகு போல் காக்கும் கழகத்தின் இளைஞர் படை ஸ்டீல் சிட்டி சேலத்தில் அலை அலையாய்த் திரளட்டும்!

தங்கத் தமிழ்நாடு பெரியார், அண்ணா, கலைஞர் மண் என்பதை இளைஞர் பட்டாளம் நிரூபிப்பதைப் பார்த்து பிற்போக்கு சனாதன சக்திகள் மிரளட்டும்!

மடை திறந்த வெள்ளம் போல் சேலத்தில் பாய்ந்து இந்தியாவின் இதயத்தை வெல்லட்டும்

இளைஞர் படை!

காந்தியும், பெரியாரும், அண்ணாவும், கலைஞரும், மாசற்ற முதல்வர் தளபதி ஸ்டாலினும் சனாதனக் கோழைகளின் இலக்காக இருப்பது ஏன் என்கிற கேள்விக்கு, சேலத்தில் குவியும் வேழங்களின் வெற்றி எழுதட்டும் எவராலும் மறுக்க இயலா விடை!




**புலவர் இந்திர குமாரி**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மா. சுப்பிரமணியம்

### சனவரி 15 (2013)



ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்

ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

" 'மா.சு' என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம. சங்கரலிங்கம்

### சனவரி 15 (2016)



தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் அடியொற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.

1964 முதல் 1984 வரையிலான இருபது ஆண்டுகள் தொடர்ந்து தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – நான்கு ஆண்டுகள் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியவர்.

1998 முதல் 2004 வரை இந்திய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.

அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக 'அறிஞர் அண்ணா கல்லூரி' ஒன்றினை நிறுவி, அதன் முதல்வராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பொங்கல் திருநாளை முன்னிட்டு கோயம்பேடு

# மொத்த விற்பனை அங்காடியில் "பொங்கல் சிறப்புச் சந்தை"!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டார்!

சென்னை, ஜன.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள "பொங்கல் சிறப்பு சந்தையை" அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (14.1.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள பொங்கல் சிறப்பு சந்தையை நேரில் சென்று பார்வையிட்டு, கரும்பு, மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்து உள்ளிட்ட பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் விவசாயிகளிடமும், அங்கு தூய்மைப் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களிடம் கலந்துரையாடினார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது :-

பொங்கல் திருநாளை முன்னிட்டு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் அமைக்கப்பட்டுள்ள பொங்கல் சிறப்பு சந்தை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் இந்தக் கோயம்பேடு அங்காடியில் பண்டிகை பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டு சிறப்பு சந்தை அமைப்பது வாடிக்கையாக இருந்து வருகிறது. இவ்வாறான சிறப்பு சந்தை, மலர் அங்காடிக்கு பின்புறம் முந்தைய காலத்தில் அமைத்து செயல்பட்ட பொழுது கனி மற்றும் மலர் அங்காடியை சார்ந்த வியாபாரிகள் பாதிப்பு அடைந்ததாக குறிப்பிட்டு இதற்கான தீர்வு கோரினர்.

அவர்களுடைய வேண்டுகோளினை ஏற்று "A" ரோட்டில் சுமார் 7.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் பொங்கல் சிறப்பு சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சிறப்பு சந்தையினை அடையாளம் காணும் வகையில் ஆங்காங்கே பதாகைகள் அமைக்கப்பட்டதோடு ஒலிபெருக்கி மூலமாக அனைவரும் அறியும் வண்ணம் அறிவிப்பும் செய்யப்பட்டு வருகின்றது.

இத்தகையச் சிறப்பு சந்தையில் பொங்கல் பண்டிகைக்கான கரும்பு, மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்து உள்ளிட்ட பூஜை, பொருட்கள் விற்பனை செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சந்தைக்கு கரும்பானது மதுரை, தேனி, பண்ருட்டி, கடலூர் போன்ற பகுதிகளில் இருந்தும், மஞ்சள் கொத்து கும்மிடிப்பூண்டி, ஈரோடு போன்ற பகுதிகளில் இருந்தும், இஞ்சிக் கொத்து கும்பகோணம், நெல்லூர், போன்ற பகுதிகளில் இருந்தும் வியாபாரத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பொங்கல் சிறப்பு சந்தைக்கு சரக்குகளை ஏற்றிவரும் கரும்பு வாகனங்களுக்கு தலா ரூ.1,500 எனவும், மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்தை ஏற்றிவரும் வாகனங்களுக்கு தலா ரூ.1,000 என சந்தை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் வாகனம் நிறுத்துமிடத்தில் பொங்கல் சிறப்பு சந்தைக்கென கூடுதலாக குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளதோடு, மேலும் சென்னை பெருநகர காவல் துறையினரின் உதவி கொண்டு சட்டம் மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து சீர் செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் பெய்த பெரு மழையின் காரணமாக 8 மாவட்டங்களில் முழுமையாக பாதிக்கப்பட்டது. அப்படி இருந்தும் இந்த விழாக்காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் வணிகம் நடந்து கொண்டிருக்கின்றது. போதிய அளவு பொதுமக்களுக்கும் சந்தை நடப்பது ஏற்கனவே நாளிதழ்களிலும் ஊடகங்களிலும் தெரியப்படுத்தி இருக்கின்றோம். இந்த பொங்கல் சந்தை சில்லரை விற்பனையாளர்களுக்கு பெரும் உதவியாக இருக்கிறது. இம்மாதம் 11ஆம் தேதி தொடங்கிய இந்த சந்தை 17ஆம் தேதி வரையில் நடைபெற இருக்கின்றது. தற்போது வரையில் 350 கரும்பு ஏற்றி வருகின்ற லாரிகளும். 100 மஞ்சள் ஏற்றி வரும் லாரிகளும் இந்த சந்தைக்கு வந்திருக்கின்றது.

இந்த சந்தையில் சேருகின்ற குப்பைகளை அகற்றுவதற்கு 25 தூய்மைப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சந்தையில் இம்மாதம் 17ஆம் தேதி வரையில் சுமார் 1000 வாகனங்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்தையால் மொத்தமாக வியாபாரம் செய்பவர்களுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் வணிகம் செய்வதற்கு பேருதவியாக இருப்பதாக வணிகர்கள் மொத்த வியாபாரிகளும் சில்லரை வியாபாரிகளிடமும் தற்போது விசாரித்த அளவில் சிறந்த முறையில் நடைபெறுவதாக அறிவித்து இருக்கிறார்கள்.

இந்த சந்தைக்கு உண்டான அனைத்து நடைமுறைகளையும் பின்பற்ற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, கோயம்பேடு சந்தைனுடைய முதன்மை நிர்வாக அலுவலர் திருமதி. மு.இந்துமதி அவர்களும் முழு நேரமும் கண்காணித்து வருகிறார்கள். காவல்துறையும் முழுமையாக ஒத்துழைப்பு தந்து போக்குவரத்து நெருக்கடி/நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்கு அதிக அளவு காவலர்களை காவல்துறையும் நியமித்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பிலும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு காவலர்களை நியமித்து இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சந்தையானது 17 ஆம் தேதி வரையில் நடைபெற இருக்கின்றது.

இந்த பகுதியை பொறுத்தளவில் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்துகின்ற கருத்துரு ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றது. வெகுவிரைவில் இந்த மருத்துவமனையை முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதற்குண்டான நடவடிக்கை எடுப்போம். நாளை, நாளை மறுநாள் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்களிலும் ஒரு மருத்துவ முகாமை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனையும் இன்றோ அல்லது நாளையோ இந்த இடத்திலும் கோயம்பேடு இந்த சிறப்பு பொங்கல் சிறப்புச் சந்தையில் செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, கோயம்பேடு அங்காடி முதன்மை நிர்வாக அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மு.இந்துமதி, செயற்பொறியாளர் ராஜன் பாபு, உதவி செயற்பொறியாளர் திருமதி.அமுதா மற்றும் சிளம்டிஏ அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## டி.காமராஜ் ஏற்பாட்டில் – பெருங்களத்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# 5000 பேருக்கு புத்தாடைகள் - பொங்கல் பரிசுத் தொகுப்பு!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு வழங்கினார்! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம், ஜன. 15 -

தாம்பரம் மாநகர தி.மு.க. மற்றும் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மேற்கு தாம்பரம் டி.ஜி.பி திருமண மண்டபத்தில் கழக நிர்வாகிகள், பொது மக்களுக்கு தொடர் நிகழ்ச்சியாக 4 இடங்களில் 5000 பேருக்கு புத்தாடை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர்.

தமிழர் திருநாள் மற்றும் தைப் பொங்கல் விழாவினை முன்னிட்டு பெருங்களத்தூர் மேற்கு பகுதி திமுக சார்பில் டி.காமராஜ் ஏற்பாட்டிலும் தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் எஸ்.இந்திரன் ஏற்பாட்டிலும் தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டல குழுத்தலைவர் ச.ஜெய பிரதீப் ஏற்பாட்டிலும் மதுரப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன், அமுதா வேல்முருகன் ஏற்பாட்டிலும் கழக பொருளாளர் நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சமத்துவப் பொங்கலிட்டு அனைவருக்கும் புத்தாடைகள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பை தாம்பரம் சட்டமன்ற தொகுதி முழுவதிலும் உள்ள கழக நிர்வாகிகள், கழக தோழர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமமன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக செயலாளர்கள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பினை மகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றனர்.

---

## பல்லாவரம் – குரோம்பேட்டை அரசுப் பள்ளிகளில்

# மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ கருணாநிதி எம்.எல்.ஏ வழங்கினர் - இ.ஜோசப் அண்ணாதுரை பங்கேற்பு!

பல்லவபுரம், ஜன. 15 -

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு 2023 - 24 ஆம் ஆண்டுக்கான விலையில்லா மிதிவண்டிகளை பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் பல்லாவரம் மறைமலை அடிகளார் மேல்நிலைப் பள்ளியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் வழங்கி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி ஜமீன் ராயப்பேட்டை மாநகராட்சி மேல்நிலை அனகாபுத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மாணவர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கினார். அதை அதனைத் தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 உள்ள குரோம்பேட்டை பாரதியார் நினைவு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் பழைய பல்லாவரம் பொன்னியம்மன் கோவில் தெரு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியிலும் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மிதிவண்டிகளை வழங்கி நமது முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பல நல்ல திட்டங்களையும் வழங்கி வருகிறார். ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு திட்டம் ஆறாம் வகுப்பிலிருந்து அரசினர் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மேல் அவர்களின் மேல் படிப்பிற்காக சிறப்பு திட்டம் மேல்நிலை வகுப்பில் படிக்க மாணவ மாணவியர்கள் அவர்கள் எதிர்கால படிப்பிற்காக நான் முதல்வன் திட்டம் இது போன்ற பல்வேறு திட்டங்களை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ளார்.

தற்போது நமது தொகுதியில் உள்ள அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக மாணவச் செல்வங்களுக்கு கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது அதற்காக தலைமை ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆசிரியர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து என்று மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார் அதைத் தொடர்ந்து பழைய பல்லாவரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்ச்சியிலும் மாணவ மாணவிகளுடனும் ஆசிரியர்களும் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் உங்கள் இட்டு மாணவச் செல்வங்களுக்கு பொங்கல் இனிப்பு வழங்கி சிறப்பித்தார் அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை மாமன்ற உறுப்பினர்கள் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பெற்றோர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.




தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் சார்பில் கழக மகளிரணி மற்றும் தொண்டரணியை சேர்ந்த 700 பேருக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா சென்னை வேப்பேரி, ரிதட்ரன் சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ அரங்கத்தில் நேற்று (14.1.2024) நடைபெற்றது. இதில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், கழக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, சிறப்புரையாற்றி, 700 மகளிருக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கினார். உடன், அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, முன்னாள் எம்.எல்.ஏ.கே.எஸ்.ரவிச்சந்திரன், மாநகராட்சி மேயர் பிரியாராஜன், மகளிரணி மாவட்ட அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி., மாவட்டமகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

---

## 'தொடர்ந்து ஓட வேண்டும்' என்பதற்காக

# தமிழ்நாடு அரசு என் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறது!

### 'தந்தை பெரியார்' விருது வழங்கப்பட்டமைக்கு- பேராசிரியர் சுப.வீரபாண்டியன் நன்றி!



**சென்னை, டிச. 27 -**

**தமிழ்நாடு அரசின் சார்பில் 'தந்தை பெரியார் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டதை யொட்டி. அதற்கு நன்றி தெரிவித்து திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், விடுத்துள்ள அறிக்கையில், "தமிழ்நாடு அரசு என் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறது, தொடர்ந்து ஓட வேண்டும் என்பதற்காக! நன்றி~!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று எனக்கு வழங்கப்பட்ட தந்தை பெரியார் விருது என் வாழ்வைப் பெருமைப் படுத்தி இருக்கிறது! அந்த விருதுக்குப் பின்னால் –

பெரியாரியத் தளத்திலும், சமூக நீதிப் போராட்டக் களத்திலும் என்னை போல் இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர் இருக்க, என்னை நினைவில் வைத்து, விருதளித்து ஊக்கப் படுத்தி உள்ள தமிழ்நாடு முதலமைச்சரின் பேரன்பும் –

என் சிறு வயதில் இருந்தே பெரியார் சிந்தனைகளில் என்னை வழிப்படுத்தி, என் பெற்றோர் காரைக்குடி விசாலாட்சி இராம. சுப்பையா ஊட்டிய உணர்வும் –

திருமணம் ஆன காலம் தொட்டே, பொது வாழ்வில் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ள, என் வாழ்க்கைத் துணைவி வசந்தா அளித்த முழுச் சுதந்திரமும் –

என் அறியாமையை அன்றாடம் போக்கும் அறிவு சார் நூல்களும் –

என் பணிகளுக்கு எப்போதும் தோள் கொடுக்கும் பேரவை மற்றும் கருஞ்சட்டைத் தோழர்களின் உறுதியும் அருகிலோ தொலைவிலோ நின்று, ஆதரவுக் கரம் நீட்டி, பாராட்டி ஊக்கப் படுத்தும் உள்ளங்களின் அன்பும் –

இப்படிஎத்தனைஎத்தனையோ காரணிகள் மறைந்தும் நிறைந்தும் கிடக்கின்றன. எல்லோருக்கும் எல்லா வற்றுக்கும் என் நன்றி! நன்றி!!

தமிழ்நாடு அரசு என் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறது, தொடர்ந்து ஓட வேண்டும் என்பதற்காக! நன்றி.

இவ்வாறு தமது அறிக்கையில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வரும் செய்தி!

ஓட்டு மெஷின் இல்லாத பஞ்சாயத்து தேர்தல்களில் அனைத்து மாநிலங்களிலும் படுதோல்வி பிஜேபி!

EVM ஐ ஒழித்தால் பாஜக தானாகவே அழிந்து விடும் !

-முன்னாள் நீதிபதி கட்ஜூ



**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# திராவிட மாடல் அரசு 51

# தமிழ்நாடு என்றொரு ‘டாலர் தேசம்!’






இந்தியாவுக்குப் பல துறைகளில், பல விஷயங்களில் தமிழ்நாடு ஒரு வழிகாட்டி மாநிலமாக இருக்கிறது என்பதைப் புதிதாக யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 1920ஆம் ஆண்டு, **‘தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு’** எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்பு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. அதன் காரணமாக இன்று தமிழ்நாடு பெற்றிருக்கும் வளர்ச்சி கண்கூடு.

2021 மே மாதம் பொறுப்பேற்ற **‘திராவிட மாடல் அரசு’** கொண்டிருக்கும் முக்கிய இலக்குகளில் ஒன்று, ‘டிரில்லியன் டாலர் தமிழ்நாடு’ எனும் கனவு. அதை நனவாக்கும் விதமாக, கடந்த 7 மற்றும் 8 தேதிகளில், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024.

தலைமைத்துவம், வளங்குன்றா வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருப்பொருள்களில் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், தமிழ்நாட்டின் அடுத்த 20 ஆண்டு கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

## மழையாகக் கொட்டிய முதலீடுகள்

நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ பொறுப்புக்கு வந்தது முதல், கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பணியின், முன்களப் பணியாளராக, முதலமைச்சரே துபாய், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள அரசு அதிகாரிகள், தொழில்துறையினர் ஆகியோரைச் சந்தித்து முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்று வந்தார்.

அந்த நம்பிக்கையின் வெளிப்பாடுதான், இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தாய்பெய் பொருளாதார மற்றும் கலாசார மையம் ஆகியவை சர்வதேசப் பங்குதாரர்களாக தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

இந்த மாநாட்டில், முன்னெப்போதும் இல்லாத அளவில் 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

## முதலீடுகளை ஈர்க்கும் இருமுனை

‘ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்’ அளவுக்கு தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்த, உலகளாவிய முதலீடுகள் வேண்டும். அவற்றை ஈர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு ’இருமுனை அணுகுமுறை’யைப் பயன்படுத்துகிறது. உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது ஒரு முனை என்றால், இன்னொரு முனையில், வேலைவாய்ப்பு மிகுந்த முதலீடுகளை ஈர்க்க வேண்டும்.

அதனால்தான் ஒரு பக்கம், மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் பி.வி. செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துகிறது கழக அரசு. இன்னொரு முனையில், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் கோரப்படுகின்றன.

இந்தப் பின்னணியில், மாநாட்டின் முக்கிய நிகழ்வாக ‘தமிழ்நாடு குறைக்கடத்தி (செமிகன்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை’, ‘பொது - தனியார் கூட்டாண்மைக் கொள்கை’ மற்றும் டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவை முதலமைச்சரால் வெளியிடப்பட்டன.

### ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024’ சில சிறப்புகள்!

- **7** நாடுகள் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்திருந்தன.
- **8** அரங்குகள், தமிழ்நாட்டின் பெருந்தொழில்கள் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டிருந்தன.
- **23** துறைகளைச் சேர்ந்த 41 புத்தொழில் விற்பனையகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- **26** தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.
- **30**-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- **150**-க்கும் மேற்பட்ட பல்வேறு துறை வல்லுநர்கள் கலந்துகொண்ட கருத்தரங்குகள் நடைபெற்றன.
- **701** கல்லூரிகளில் மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரலையில் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- **20,000**-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனப் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டுத் தூதர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த முதலீட்டாளர் மாநாட்டில், தமிழ்நாட்டின் தொழில் கட்டமைப்புகள் பாராட்டப்பட்டதுடன், ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘நான் முதல்வன்’ திட்டம் போன்ற திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளை ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் போன்றவர்கள் பாராட்டியது மிக முக்கியமான சிறப்பம்சம்!

## வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு

இந்த மாநாட்டில், பன்னாட்டு முதலீடுகளை ஈர்ப்பதுடன், உள்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் பயனடையும் வகையில் **‘வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு’** நடைபெற்றது. இதில், 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொண்டனர்.


அதன் பலனாக, 174 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்து 50.70 இலட்சம் அமெரிக்க டாலருக்குக் கொள்முதல்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 19.55 இலட்சம் அமெரிக்க டாலர்கள், 73 புதிய முதல்முறை ஏற்றுமதியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

போலவே, தமிழ்நாட்டின் புத்தொழில்களுக்கான (ஸ்டார்ட் அப்) நிதி வழங்கும் ‘டான்ஃபண்ட்’ இணையதளம் தொடங்கி வைக்கப் பட்டது.

காகிதத்தில் கையெழுத்தான இந்த முதலீடுகளை, செயல்பாட்டு வடிவத்துக்குக் கொண்டு வருவதற்கும், அடுத்தடுத்த முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கும் சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாநாட்டின் நிறைவு விழாவில் பேசிய அவர், “எங்கள் மாநிலத்தில் முதலீடு செய்ய வரும் அனைவரையும் நான் தொழில்முனைவோராக மட்டுமல்ல. தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்களாகப் பார்க்கிறேன்” என்றார். நிச்சயமாக அந்தத் தூதுவர்கள், இந்த திராவிட மாடல் அரசில் உலகத்தைத் தமிழ்நாட்டுக்குத் தேடி வரச் செய்வார்கள்!

...சாதனை தொடரும்

## மெய்யியலின் பெருங்கனவு சோக்ரடீஸ்!




‘தத்துவம் என்று அழைக்கப்படும் மெய்யியல் என்பது அறிவின் மீதான காதல்’ என்பார் பேரறிஞர் அண்ணா. தத்துவ அறிவு, தனிமனிதரின் சிக்கலைத் தீர்க்கும் திறனை மேம்படுத்துகிறது. கருத்து விவாதங்கள், தர்க்க நடைமுறை போன்றவற்றை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

எம்.எஸ்.எம்.அனஸ், சோக்ரடீசை முன்வைத்து ‘மெய்யியல் என்னும் பெருங்கனவு’ நூலில் தத்துவ விசாரணைகளில் பல்வேறு கோணங்களை நம்மிடம் காட்சிப்படுத்துகிறார். இதை மெய்யியலின் கருவூலமான கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறார். சமய, அரசியல் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் இந்த நூல் அலசுகிறது. அன்றாட வாழ்வில் நாம் பேசும் பகுத்தறிவு வாதம், ஒழுக்கவியல் ஆகியவற்றில் நமது தத்துவப் பார்வையை மேம்படுத்த இந்த நூல் முன் நிற்கும்.

மன்னராட்சி காலத்திலான சோக்ரடீசின் விமர்சனங்கள், மக்களாட்சி காலத்திலும் பொருத்தமானதாக இருப்பதை நூலை வாசிக்கையில் அறிந்து கொள்ளமுடியும். தமிழ்நாட்டில் தந்தை பெரியார் முதல் கலைஞர் வரை சோக்ரடீசின் சிந்தனைகளுக்குத் தந்துள்ள முக்கியத்துவத்தையும் இந்த நூல் விவரிக்கிறது. இந்த நூலை அடையாளம் பதிப்பகம் ரூ.260 விலையில் வெளியிட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்





செல்வராஜ்

### கலைஞர் மடியில்!

1949 ஆம் ஆண்டு செப்டம்பரில் தி.மு. கழகம் தொடங்கப்பட்ட நான்காவது மாதத்திலேயே அறிஞர் அண்ணா ஆணைப்படி கணியூரில் கிளைச் செயலாளர் கே.ஏ.முருகேசன் மற்றும் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் வரவேற்புக் குழு பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய நாளில் தலைவர் கலைஞர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் பணிச்சுமை மற்றும் உடல் நலிவால் கலந்து கொள்ள இயலவில்லை. அதனால் 1950 ஏப்ரல் 14-இல் கணியூரில் தி.மு.க பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் கலந்து கொண்ட போது எடுத்துக்கொண்ட 73 ஆண்டுகள் பழமையான புகைப்படம் இது. முன் வரிசையில் இடமிருந்து வலமாக அப்துல் ஜப்பார், கழக மூத்த பெரியவர் எஸ்.வி.லிங்கம், அடுத்து திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன், தலைவர் கலைஞர் அவர் மடியில் 9 வயது சிறுவனாக நான், அதற்கடுத்து என் தந்தையார் கிளைச் செயலாளர் கே.ஏ.முருகேசன், இசை முரசு நாகூர் ஹனிபா.

**-டாக்டர். செல்வராஜ், ஓய்வுபெற்ற பேராசிரியர், கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியார்- அண்ணா பாசப்பிணைப்பு!

**1968 செப்டம்பர் 10-ஆம் தேதி சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்பட்டார் அண்ணா. மிகுந்த சோகத்துடன் இருந்த பெரியார், விமான நிலையத்துக்குப் போகலாம் எனக் கேட்கிறார். ‘நேரம் ஆகிவிட்டது, சந்திக்க முடியாது’ என்கிறார் ஆசிரியர் கி.வீரமணி. விமானத்தையாவது பார்த்துவிட்டு வரலாம் எனப் புறப்பட்டார் பெரியார். தனக்கு முன்பே விமான நிலையம் வந்துவிட்ட பெரியாரைப் பார்த்து அண்ணாவுக்கு அதிர்ச்சி. ஏனெனில், அப்போதுதான் மருத்துவமனையில் பார்த்துவிட்டுத் திரும்பியிருந்தார் பெரியார். பாசத்தில் பெரியாருக்கு வயது மறந்தது. அண்ணாவுக்கு உடல்நிலை குன்றியது மறந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 360




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131